
# 2.இதய ரோஜா



அகிலா கோவிந்த்



26573

இனிய முடிவு கொண்ட
இனிமையான நாவல்

# இதய ரோஜா

1



மதுராவுக்கு அன்று ஒரே பரபரப்பாக இருந்தது. என்னவென்று தெரியவில்லை. ஏதோ ஓர் உணர்வு. எதையோ பறிகொடுத்து விட்ட தவிப்பு.

அதே தவிப்புடன்தான் அவசர அவசரமாய் காலை சமையலை முடித்து வேலைக்குப் புறப்பட்டாள். புறப்படும்முன் அதே பரபரப்புடன் மதிய உணவிற்கான டிபன் பாக்ஸை தந்தையின் முன் நீட்டியபோது அவர் கண்டுபிடித்து விட்டார்.

கண்கள் படபடக்க அவள் எதையோ 'உள்ளுக்குள்' போட்டு தவித்துக் கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டார். "என்னடா செல்லம், வேலையில் ஏதும் பிரச்சினையா? உன் முகம் ஒரு மாதிரியாக இருக்கிறதே?" என வினவும் செய்தார்.

அய்யோ தந்தை கண்டுபிடித்து விட்டாரே என சட்டென துணுக்குற்றுப் போன மதுரா, மறுகணமே சுதாரித்து தன் அரிசிப் பற்கள் அத்தனையையும் காட்டி வலுக்கட்டாய புன்முறுவல் ஒன்றை தவழ விட்டாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லையப்பா, இருந்தால் உங்களிடம் சொல்லாமல் இருப்பேனா?" என்று சமாளிக்கவும் செய்தாள்.



அன்புத் தந்தை சிவராமிற்கு அதற்கு மேல் செல்லமகளின் மனநிலையை ஆராய நேரமில்லை. அவகாசமில்லை. அவரும் அலுவலகத்திற்குச் சென்றாக வேண்டும். கடைக்குட்டி வசுதாவை பள்ளிக் கூடத்திற்குத் தயார் செய்து, தன் ஸ்கூட்டர் பின்னால் ஏற்றி அவரும் புறப்பட்டு விட்டார்.

மதுரா பலமாய் கையசைத்து அவர்களை வழியனுப்பி விட்டு அதே பரபரப்புடன் உள்ளே நுழைந்தாள். அலமாரியின் நீள பளபளப்பான கண்ணாடியில் தெரிந்த தனது சிவந்த அழகு முகத்தை ஒரு விநாடி உற்று நோக்கினாள்.

அப்பா கண்டுபிடித்து விட்டாரே? அப்படி என்ன 'அந்த விசயம்?' அவள் முகத்தில் எழுதியா ஒட்டியிருக்கிறது?

இருபது வயது தங்கச்சிலை போல் பளீரிட்டுத் தெரிந்த தன் முகத்தையும், தனது வனப்பான உடல் அழகையும் ஒரு கணம் மெய்மறந்து ரசித்தவள், இந்த அழகில் வசந்தன் மயங்காமல் இருக்க முடியுமா? என தனக்குத்தானே கேள்வியும் எழுப்பிக் கொண்டாள்.

வசந்தனை நினைத்த மறுவினாடியே அவள் கண்கள் முழுவதும், அவனது உருவம் விரிந்தது. அந்த பளபளப்பான முடி, பரந்த நெற்றி, ஊசி போல் குத்தும் காந்த விழிகள், செதுக்கிய இறுக்கத்துடன் உதடுகள், திடமான புஜங்கள், நல்ல உயரத்துடன் வனப்பான உடற்கட்டு... எல்லாமே அவளை மலைக்கச் செய்தது.

வசந்தனை இன்றைக்குப் பார்க்கப் போகின்றோம் என்ற நினைப்பு குபீரென சந்தோஷ நீரூற்றாய் எழுந்து அவளை ஒரு ஆட்டு ஆட்டியது.

மதுரா மேலும் அவசரம் கொண்டவளாய்ப் பூஜையறைக் குள் நுழைந்து, சுவரில் மங்களகரமாய் போட்டோவில் மாலை

யுடன் சிரித்துக் கொண்டிருந்த தாயின் புகைப்படத்தை வணங்கிவிட்டு புறப்பட்டாள்.

ஹாண்ட்பேக், டிபன் பாக்சுடன் வீட்டைப் பூட்டி அவள் புறப்பட்டபோது மணி ஒன்பது. எப்படியும் பஸ்ஸைப் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கையோடு விறுவிறுவென நடந்தாள்.

மதுரா ஒரு வழியாய் பஸ்ஸைப் பிடித்து அலுவலகத்திற்கும் வந்தாயிற்று. அலுவலகத்திற்கு வந்தும் பரபரப்பு அடங்க வில்லை. வேலையில் கவனம் செலுத்த முயலவில்லை.

வேலை எப்போது முடியும் மாலை எப்போது வரும் என்று மதுரா எதிர்பார்க்கத் தொடங்கி விட்டாள்.

மதுராவின் மனங்கவர்ந்த வசந்தனை ஒரு வாரமாய் சந்திக்க முடியவில்லை. வசந்தனுக்கு வேலை அதிகம். இவ்வாரம் சந்திக்க இயலாது என முன்பே சொல்லிவிட்டான்.

Uploaded by Naghu

மதுராவுக்கு அந்த ஒரு வாரத்தை ஓட்டுவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது. எதிலுமே லயிப்பில்லாமல் இயந்திரம் போல்தான் நடமாடிக் கொண்டிருந்தாள்.

எப்போதும் வசந்தன் நினைப்புதான். எதிலும் வசந்தன் முகம்தான். படுத்தாலும் தூக்கம் வந்தபாடில்லை. கண்களுக் குள், கண்ணின் இமைக்குள் வசந்தன்தான் தெரிந்தான்.

அப்போதுதான் மதுராவுக்குப் புரிந்தது. தான் வசந்தனை எவ்வளவு தீவிரமாய் காதலிக்கிறோம். அவனைப் பார்க்காமல் தன்னால் ஒரு வாரம் கூட இருக்க முடியவில்லையே என்பதைப் புரிந்து கொண்டாள்.

பல்லைக் கடித்துக் கொண்டு ஒரு வாரத்தையும் மதுரா ஓட்டி விட்டாள். இன்று திங்கட்கிழமை. இன்று மாலைதான்



அவனை பார்க்க முடியும். இன்று வசந்தனைப் பார்க்கப் போகிறோம் என்ற இனம் புரியா பரபரப்பு காலையிலே அவளை தொற்றிக் கொண்டது.

மணி மாலை ஐந்து. மதுரா வேலை முடிந்த குஷியோடு புறப்பட்டாள். கடற்கரை பீச் மணலில்தான் வழக்கம் போல் வசந்தன் அவளுக்காக காத்திருப்பான். காத்திருந்தான்.

மதுரா மலர்ச்சியுடன் வந்தாலும் வாடிய முகத்துடன் கவலை தோய்ந்த முகத்துடன் இருந்த வசந்தனைக் கண்டு அதிர்ந்து போனாள்.

## 2



மதுராவுக்கு ஆச்சரியமாக இருந்தது. இரண்டு வாரம் பார்க்காத ஏக்கத்தில் எவ்வளவு ஆவலாய் அவனைப் பார்க்க ஓடி வந்திருந் தாள்.

வசந்தனோ அதைக் கொஞ்சமும் உணர்ந்து கொள்ளாதவனாய் அசட்டையாய், "ஆமாம் வரவில்லை..!" என்றான் மொட்டையாக.

"அதான் ஏன் என்று கேட்கிறேன்? உங்களைப் பார்க்காமல் நான் எவ்வளவு துடித்துப் போய்விட்டேன் தெரியுமா?"

மூச்சு வாங்க மதுரா கேட்டதற்கு எந்த பதிலும் சொல்லாமல் வசந்தன் வானத்தையே வெறித்தான். பின் பெருமூச்சொன்றை உதிர்த்தவனாய் "நான் ஞாயிற்றுக்கிழமை பிரின்ஸ் பிளாஸா வில் உன்னைப் பார்த்தேன்.." என்றான் அமைதியாக.

"பார்த்தீர்களா?"

''ஆமாம். உன் முதலாளியுடன் வந்திருந்தாயே.. அந்தக் கண் கொள்ளாக் காட்சியைப் பார்த்தேன்...'' என்றான் வசந்தன் விடாப்பிடியாய்.

வசந்தன் 'வேண்டுமென்றே 'முதலாளி' வார்த்தையில் அழுத்தம் கொடுத்து 'கண்கொள்ளாக் காட்சி' என வர்ணித்தது கண்டு மதுரா துடிக்கத்தான் செய்தாள்.

அவளது துடிப்பு மறுகணமே கோபமாயும் மாறி விட்டது. பொசுக்கென சிலிர்த்துக் கொண்டவளாய், ''இப்போது எல்லாம் புரிந்து விட்டது'' என்றாள் முறைப்புடன்.

''என்ன புரிந்தது?''

''உங்கள் கோபம் சலிப்பு எல்லாவற்றுக்குமான காரணம் புரிந்து விட்டது.எல்லாம் சந்தேக நோய். ஆண்கள் புத்தி!'' என்றாள் பரிகாசக் குரலில்.

அவள் பரிகாசத்தை வசந்தன் புரிந்து கொண்டாலும் கோபம் தணியாதவனாய், ''பின்னே ஒரு வயதுப் பெண் ஆண் ஒருவனுடன் ஊர் சுற்றிக் கொண்டிருந்தால், அதற்கு என்ன செய்வது?''

''ஒன்றும் செய்ய வேண்டாம். நான் ஒன்றும் அறியாச் சிறுமி அல்ல. அதைப் புரிந்து கொள்ளுங்கள். அவர் ஒன்றும் முன் பின் தெரியாதவர் அல்ல. என் முதலாளி.''

''அதனால்தான் பயப்படுகிறேன்.''

''இதில் பயப்படுவதற்கு என்ன இருக்கிறது?''

எதிர்கேள்வி கேட்டவளை ஆச்சரியமாய் தோள்களை சிலுப்பியபடி வசந்தன் பார்த்தான்.

''உனக்குப் புரியாது. சொன்னாலும் புரிய வைக்க முடியாது.''



''முதலில் நடந்ததை புரிந்துக் கொள்ளுங்கள். அப்புறம் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். நடந்தது என்ன தெரியுமா?''

''ம்ம்.. சொல்லு...''

''பாஸ்கர் ஞாயிற்றுக்கிழமை வீட்டிற்கே வந்து விட்டார். ஊரிலிருந்து அவரது சகோதரி வருகிறார்களாம். அவர்களுக்கு அவசரமாய் சேலை ஒன்றையெடுத்து கொடுக்க வேண்டுமாம். நான் வந்து சேலை கடையில் நல்ல சேலையாய் செலக்ட் செய்து தரும்படி கெஞ்சினார். அப்பாவும், 'போய் வாம்மா..' என்று வற்புறுத்தினார். நானும் முதலாளியாயிற்றே எப்படி மறுப்பது என வேறு வழி இல்லாமல் போனேன். அதைப் பார்த்த உங்களுக்கு பொறுக்கவில்லை. மனதால் கயிறு திரித்து விட்டீர்கள்..'' மதுரா மூச்சு விடாமல் பேசி முடித்தாள்.

Uploaded by Naghu

வசந்தன் தலைகுனிந்தபடியே இருந்தான். அவனுக்கு மதுராவின் நியாயம் புரிந்தது. உண்மை உரைத்தது.

அவன் நிலைமையை உணர்ந்து கொண்டவளாய் மதுரா அவனது அடர்ந்த முடிக் கற்றையைப் பிடித்து சிலுப்பினாள். பளபளப்பான மூக்கைப் பிடித்து கிள்ளினாள். ''என்ன ஐயாவுக்கு கோபம் தணிந்தாயிற்றா..?'' சிரிப்பு பொங்க கேலியும் செய்தாள்.

வசந்தன் சங்கடப்பட்டவனாய் நிமிர்ந்தான், சிரிக்க முயன்றான்.

''என்னை மன்னித்துவிடு மதுரா. அடிக்கடி உன்னை சந்தேகப்படுகிறேன். கோபப்படுகிறேன். எல்லாவற்றுக்கும் காரணம் பயம்தான்..''

''பயமா?''

''ஆமாம்.. எங்கே நீ எனக்கு கிடைக்காமல் போய்விடு வாயோ? நம் காதல் கைகூடாமல் போய்விடுமோ என்ற பயம்தான்..''

வசந்தன் சொன்னதற்குப் பதில் சொல்லாமல் மதுரா கண்களை அகல விரித்து அவனை ஆழமாய்ப் பார்த்தாள்.

வசந்தனும் அவளையே உற்றுப் பார்த்தவன், ''இதான் இந்த அழகுதான் மதுரா... உன்னுடைய கிறங்கடிக்கும் இந்த அழகுக் கவர்ச்சிதான் எனக்கு பயத்தைக் கொடுக்கிறது. யாராவது உன்னைக் கொத்திக் கொண்டு போய்விடுவார்களோ... என்ற அச்சத்தைத் தருகிறது..''

வசந்தன் பேசி முடித்ததும், அதுவரை பொறுமை யில்லாதவள் போல் செல்லமாய் ஒரு தட்டு தட்டினாள் மதுரா.

''அசடுபோல் பேசாதீர்கள். நான் உங்களுக்கு. நீங்கள் எனக்கு என்பது இந்த ஜென்மத்தில் நமக்கு எழுதப்பட்டிருக்கும் விதி. அதை யாராலும் மாற்றவும் முடியாது. மாற்றவும் விட மாட்டேன்.''


அழுத்தந்திருத்தமாய் பேசியவளை ஆச்சரியமாய்ப் பார்த்த வசந்தன். ''இந்த ஜென்மத்தில் மட்டும்தானா?'' என்றான். ஆதங்கமான குரலில்.

''ஆமாம், இந்த ஜென்மத்தில் மட்டும்தான். அடுத்த ஜென்மத்தில் நான் வசந்தனாகப் பிறக்கப் போகிறேன். நீங்கள் மதுராவாக பிறந்து கொள்ளுங்கள்.''

மதுரா சொல்லிவிட்டு அடக்க முடியாமல் அரிசிப் பற்களைக் காட்டி சிரித்தாள். வசந்தனும் சிரித்தான். பாஸ்கர் உருவில் ஆபத்து வரப் போவதை அவர்கள் இருவரும் அப்போது உணரவில்லை.



## 3



வீட்டிற்கு வந்து ரொம்ப நேரமாகியும் மதுராவுக்கு கொதிப்பு அடங்கவில்லை. அவள் பார்த்த காட்சி நெருப்புப் பந்தாய் அவளை விரட்டியது. அவளால் நம்ப முடியவில்லை. அவளது அப்பாவியான அப்பா இன்னொரு பெண்ணுடன் நெருக்க மாய் நடந்தபடி...

நிஜமா? நிஜம்தானா? அப்பாவா இப்படி? நம்ப முடியாத வளாய் முணுமுணுத்து ஹாண்ட்பேக்கை கொக்கியில் மாட்டியவள் அப்படியே நிலைப்படியில் உட்கார்ந்து விட்டாள்.

இருட்டத் தொடங்கிய நேரத்தில்தான் டியூசன் முடிந்து புத்தகப் பையுடன் தங்கை வசுதா வந்தாள்.

வந்தவள் திக் பிரமை பிடித்தவள் போல் இருக்கும் அக்காவின் கோலத்தைப் பார்த்து பதறினாள்.

மேலும் தவித்தவளாய், ''என்னக்கா? என்னக்கா ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?'' என்று மதுராவை அவள் உலுக்கியபோதுதான் மதுராவிற்கு உணர்வு வந்தது.

அன்புத் தங்கையை அப்படியே கட்டிக் கொண்டாள். வசுதா சின்னப் பெண். அவள் மீது எப்போதுமே மதுராவுக்கு அளவு கடந்த அன்பு... பாசம்.. எட்டாம் வகுப்பு படிப்பவளிடம் போய் எதைச் சொல்வது எப்படிச் சொல்வது?

மேலும் இது சொல்லக் கூடிய விஷயமா? அவள் புரிந்து கொள்ளக் கூடிய விசயம் அல்லவே...? மதுரா அவசரமாய் பேச்சை மாற்றிக் கொண்டாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை, வசும்மா. நீ சொல்லு. டியூசன் முடிந்து விட்டதா? பள்ளியில் இன்று என்ன.. ஏதும் விசயம் வைத்திருப்பாயே...?'' என அவள் வாயைக் கிளறினாள்.

மதுரா இப்படிக் கேட்டதும் வசுதாவுக்கு அவல் கிடைத்தது போல்தான் ஆயிற்று. பொதுவாகவே இரவு படுக்கும்போது போர்வையோடு அக்காவையும் சேர்த்து இறுக்கியவாறு பள்ளிக் கதைகளை, தனது தோழிகளை, 'மிஸ்'மார்களை பற்றி கதை கதையாய் அளப்பது வழக்கம். மதுராவும் சுவாரஸ்யமாக 'உம்' கொட்டியவாறு எல்லாவற்றையும் வியந்து கேட்டாள்.

இப்போதும் மதுரா அப்படிக் கேட்க மறுகணமே உற்சாக மாகிப் போனவளாய் அன்று நடந்த முக்கியமான நிகழ்ச்சி யொன்றை விவரிக்க ஆரம்பித்து விட்டாள் வசுதா.

மதுராவும் அதை ரசிப்பவள் போல் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். ஆனால் அவள் உள்மனம் எதையும் ரசிக்கவில்லை. அப்பாவையே சுற்றிச் சுற்றி வந்தது. கண்ணால் கண்ட காட்சி திரும்பத் திரும்ப அவளை வாட வைத்தது.

ஆனால் மதுரா வசுதாவிடம் எதையும் வெளிக்காட்ட வில்லை. அரிசிப் பற்களை வெளிப்படுத்தி சிரிப்பது போல் பாவித்துக் கொண்டாள். ஜாக்கிரதையாய் நடந்து கொண்டாள். வசுதா சின்னப் பெண். இளவயதில் அவளை வாட வைத்து விடக் கூடாது. எவ்வித கவலையும் அவள் கொள்ளுதல் ஆகாது என்பதில் உறுதியாகவும் இருந்தாள்.

ஒருவழியாக வசுதா பாடம் படித்து உணவு முடித்து தூங்கி யும் விட்டாள். இனி இரவு பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் அப்பா வந்தபாடில்லை.

மதுராவுக்கு கலக்கமாகத்தான் இருந்தது. தான் அப்பாவைப் பார்த்த அந்தக் கணத்தில் அப்பாவும் அவளைக் கவனித்து விட்டார். சட்டென திகைத்து சப்தநாடி ஒடுங்க கூனிக் குறுகிப் போனது அவர் தானே? குனிந்த தலையை நிமிர்த்தாமல் விறுவிறுவென அகன்றதும் அவர்தானே?



தான் அந்தக் காட்சியைக் கண்டதும் துடித்தது போல் அவரும் துடிக்கத்தானே செய்திருப்பார்? பெற்ற மகளுக்கு எந்த விசயம் தெரியக் கூடாது என்று மறைத்து வைத்திருந்தாரோ... அது தெரிந்து விட்டதில் பதறித்தானே போயிருப்பார்?

ஒருவேளை.. அந்த பதட்டத்தில் மனம் உடைந்து... வேறெதுவும் விபரீதமாய் சிந்தித்து விரக்தியாய் முடிவு ஏதும் எடுத்து விட்டால்?

ஒருகணம் நடுங்கியவளாய் கூடத்து சுவரோரம் மாலை யுடன் இருந்த அம்மாவின் பெரிய புகைப்படம் முன் போய் கண்கலங்க நின்று கொண்டாள். சிரித்தபடி புகைப்படத்தி லிருந்த தாயார் ஆறுதலாய் பார்ப்பது போல், 'கவலைப்படாதே. எல்லாம் நல்லபடியாக நடக்கும் மதுரா' என்று சொல்வது போல் இருந்தது.

ஒரு நிமிடம் தாயின் அன்பு முகத்தையே இமைக்காமல் பார்த்தாள். கள்ளங்கபடமற்ற இந்தத் தாய் முகத்தை அவ்வளவு சுலபத்தில் தந்தையால் எப்படி மறக்க முடிந்தது எனவும் நினைத்தாள்.

மறுகணம் வெளியே கேட்ட கிணுங்... கிணுங் சைக்கிள் மணியோசை அவளது சிந்தனையை கலைத்தது.

அப்பாதான்! அப்பாவின் பழைய ஓட்டை சைக்கிளின் ஒற்றை மணியோசைதான்!

முன்புறம் ஆவலாய் மதுரா தேடிப் போக.. மகள் என்ன சொல்லப் போகிறாள் என்ற பயம் பொங்க தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தார் தந்தை சிவராம்.

அப்பாவைக் கண்டதும் மதுரா ஏதும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. வழக்கம்போல் அவரது டிபன்பாக்ஸ்

கூடையை வாங்கிவிட்டு இறுகிய முகத்துடன் உள்ளே சென்று விட்டாள்.

சிவராம் மகளின் முகத்தை ஆராய முயன்று தோற்றுப் போய் முகம் தொங்க உள் கட்டிற்குச் சென்றார்.

மதுரா தயாராய் உணவு எடுத்து வைத்திருந்தாள்.

குனிந்த தலையுடனே உட்கார்ந்து படபடவென உணவை சாப்பிட்டு முடித்தார் சிவராம்.

கைகழுவி, வசுதா அயர்ந்து தூங்குவதை உறுதி செய்து விட்டு முன்புறம் வந்தார்.


அங்கு அவருக்காக கைகட்டி எரிக்கும் விழிகளுடன் காத்துக் கொண்டிருந்தாள் மதுரா.

அவரால் மதுராவின் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்க முடியவில்லை. ரொம்பவும் சோர்வடைந்தவராய் தளர்ந்த நடையுடன் வந்தவர் அப்படியே உடைந்து விட்டார்.

''மதுக்குட்டி, என்னை மன்னித்து விடம்மா..''

மறுகணம் சிறு குழந்தை போல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார் சிவராம்.

4



மதுரா இதை எதிர்பார்க்கவில்லை.

தந்தை ஏதும் நொண்டிச் சமாதானம் சொல்லுவார் என்று எதிர்பார்த்தவளுக்கு குழந்தை போல் அவர் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டது திடுக்கிடச் செய்தது. அதுவும் செல்லமாய் அன்பொழுக அவர் அழைக்கும் மதுக்குட்டி என



பாசத்துடன் விளித்துச் சொன்னது அவள் கல்மனதை கரைத்தது.

நெருப்பின் சிகரமாய் இருந்தவள் மறுகணமே, நீரூற்று போல் மாறினாள்.

என்ன இருந்தாலும் பெற்றவர் அல்லவா? அவர் அழுவதை அவளால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? அவசரமாய், முதுகுகுலுங்க, அழும் அவரை அப்படியே தாங்கிப் பிடித்து உட்கார வைத்தாள். ஆறுதலாய் அவர் கண்களைத் துடைத்து ''அழாதீர்கள் அப்பா!'' என்று ஆறுதல்படுத்தவும் செய்தாள்.

அதற்கு மேல் அவர் அழுதால் தானும் உடைந்து அழுது விடுவதுபோலவும் உணர்ந்தாள். சிவராம் தன் கண்ணீரைத் துடைத்து அவளது கரங்களை கண்களில் ஒற்றிக் கொண்டார். ''இந்தப் பாவியை நீதான் மன்னிக்கணும், மன்னித்து விடம்மா..''

அவர் மறுபடியும் அரற்றியவரை சமாதானப்படுத்திய மதுரா, விஷயத்திற்கு வந்தவளாய், ''வருத்தப்படாதீர்கள். விஷயத்தைச் சொல்லுங்கள். யார் அந்தப் பெண்?'' என்றாள் ஆர்வமாய் சிவராமைப் பார்த்தபடி.

மதுரா கேட்டதும் சிவராம் இழுத்து மூச்சு விட்டவர், ''அது ஒரு பெரிய கதை. சொல்கிறேனம்மா...'' என்றார் ஆயாசத் துடன்.

''மதுக்குட்டி... முதலில் ஒன்றை நான் சொல்லி விடுகிறேன். வெறும் சபலத்தினால் இந்த அசிங்கத்தில் நான் மாட்டிக் கொள்ளவில்லை. ஒரு பெண்ணின் சூழ்ச்சிதான் என்னை இந்தக் கேவலமான நிலைக்கு தள்ளி விட்டுவிட்டது. எதுவானாலும் இந்த அற்பமானவனை நீ.. நீதான் பெரிய மனது பண்ணி மன்னிக்க வேண்டும். மன்னிப்பாயடா?''

– கொஞ்சும் குரலில் கையெடுத்து கும்பிட்டபடி சிவராம் கேட்டதும் மதுரா அரண்டுதான் போய்விட்டாள்.

உள்ளுக்குள் அவள் மனது வேகமாக துடிக்கத் தொடங்கி விட்டது.

அப்பாவையும் அந்தப் பெண்ணையும் அவ்வளவு நெருக்கமாய் பார்த்ததும் புது பழக்கம். கூடாத ஸ்நேகம் என்று மட்டும்தான் நினைத்திருந்தாள்.

ஆனால் அப்பா கையெடுத்து கும்பிடுவதைப் பார்த்தால்..!

விசயம் அவள் நினைப்பது போல் சாதாரணமானது அல்ல. விவகாரமானதாய் பெரிய சதி வலை ஒன்றில் அப்பா சிக்கி விட்டதைப் போலல்லவா தெரிகிறது? என்ன விசயமோ? என்ன நடக்கப் போகிறதோ?

கலவரமாகிப் போனவளாய் தந்தையையே கூர்ந்து பார்த்தாள் மதுரா.

சிவராம் அதே சுதியுடன் தொடர்ந்தார். "மதுக்குட்டி, நான் கமலத்தை, உன் அம்மாவை எவ்வளவு நேசித்தேன், தெரியுமா? அவள் இறந்த பின்னும், அவள் பிரிவைத் தாங்காமல் தனியே எத்தனை முறை அழுதிருக்கிறேன்... அரற்றியிருக்கிறேன்..? அப்படி ஒரு சோகத்தில் நான் அலுவலகத்தில் வேலையும் ஓடாமல் மனதில் லயிப்பும் இல்லாமல் கிடந்தபோதுதான் இந்தப் பெண் எனக்கு அறிமுகமானாள்."

சிவராம் முடிக்கும் முன்பாகவே, "அலுவலகத்திலா? அப்படியானால்..?" என்று மதுரா புருவம் சுருக்க, தலையை தாழ்த்திய சிவராம், "நீ நினைப்பது சரிதானம்மா... நான் சென்ற வருடம் ரிடையர்டு ஆனேனே.. அதற்கு முந்தைய வருடம். இன்னும் சரியாகச் சொன்னால்.. நான் கமலத்தைப் பறி



கொடுத்து விட்டு, தவித்த ஆறே மாதத்தில் அவள் குறுக்கிட்டு விட்டாள். வெறும் வெற்றிலையும் சீவல் பாக்கும் வாங்கியதில் ஆரம்பித்ததுதான்... இப்படி விபரீதமாகி விட்டது.."

"என்னப்பா சொல்கிறீர்கள்? வெற்றிலையில் ஆரம்பித்த பழக்கமா?"

துணுக்குற்று கேட்டவளை அமைதியாகப் பார்த்த சிவராம், "ஆமாம்மா... உனக்குத்தான் தெரியுமே? எப்பொழுதும் வாயில் வெற்றிலையை குதப்பி மென்று கொண்டிருக்காமல் என்னால் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாதென்று. அந்தப் பழக்கத்தி னால் வந்த வினைதான் இது..." என்றவர் விரிவாக பெரும் கதை போல் சொல்லத் தொடங்கினார்.

"மதுக்குட்டி, தினம் வெற்றிலை வாங்குவதற்காக நான் என் ஆபீசுக்கு எதிரே உள்ள பெட்டிக் கடைக்குச் செல்வேன். வெற்றிலை வாங்கிக் கொண்டு அந்தக் கடைக்கு முன்பு உள்ள சின்ன மர பெஞ்சில் உட்கார்ந்து வெற்றிலையையும் சுண்ணாம்பையும் பாக்குத் தூளுடன் கலந்து வாயில் போட்டுக் கொண்டுதான் அலுவலகத்திற்குள் காலடி எடுத்து வைப்பது வழக்கம். அப்படி அந்த வெற்றிலை வாங்கும் பெட்டிக் கடையில்தான் இந்தப் பொன்னம்மாள் எனக்கு அறிமுக மானாள்..."

"பொன்னம்மாளா?"

"ஆம். அதுதான் அவள் பெயர். பார்க்க சாதாரணமாய்த்தான் இருப்பாள். இனிக்க இனிக்க பேசுவாள். நானும் அதில் மயங்கித்தான் பேச்சுக் கொடுத்தேன். அவள் உள் குணத்தை விஷமானதை அறியாமல் பழக ஆரம்பித்தேன். அப்போதுதான் அந்த விபரீதம் நடந்து விட்டது.."

"விபரீதமா?"

"ஆமாம் மது. எனது வெகுளியான பழக்கத்தை அவளது சூழ்ச்சிக்கு நன்கு பயன்படுத்திக் கொண்டாள். எனக்கும் அவளுக்கும் அசிங்கமான தொடர்பு இருப்பது போல் அவளே கதை கட்டி விட்டாள். அவளுள் ஒரு தறுதலை தம்பி வேறு உண்டு. அவன் ஒருநாள் ஊரைக் கூட்டி பெரிய ரவுடி போல் என் சட்டையைப் பிடித்துக் கொண்டான்."

"என்ன உங்கள் சட்டையைப் பிடித்துக் கொண்டானா?" துணுக்குற்றுப் போய் கேட்டவளை சமாதானப்படுத்தியவாறு சிவராமன் தொடர்ந்தார்.

"அந்தக் கண்றாவியை ஏன் கேட்கிறாயம்மா! அவர்கள் பணம் பிடுங்கும் சூழ்ச்சியில் நான் வகையாய் மாட்டிக் கொண்டேன்.. அவன் என் உடம்பை உலுக்குவது போல் இறுக்கி பஞ்சாயத்து செய்தான். மாதம் ஐநூறு ரூபாயை தவறாமல் நான் பொன்னம்மாளுக்கு கொடுத்து வரவேண்டு மாம். இல்லையென்றால் என்னை உண்டு இல்லையென்று பண்ணி விடுவானாம்... அப்போதுதான் அக்காவும் தம்பியும் சேர்ந்து நடத்திய நாடகத்தை, சூழ்ச்சியை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனாலும் என்ன பயன்? யார் நான் சொல்வதை நம்பப் போகிறார்கள்? யார் நியாயம் பேசி எனக்காக அந்த ரவுடியிடம் வாதாட முடியும்? அதனாலே ஒரு முடிவுக்கு வந்தேன். வம்பு தும்பிற்குப் போகாமல் மாதா மாதம் ஐந்நூறு ரூபாயை கொடுத்து விடுவது என ஒப்புக் கொண்டேன். அதன்படியே இன்று வரை அந்த ராட்சஸிக்கு எந்தத் தப்பும் செய்யாமலே மாதா மாதம் ஐநூறு ரூபாயை தண்டமாக கொடுத்து வருகிறேன். இதுதானம்மா நடந்தது.."

சிவராம் முடிந்ததும், "அப்படியானால் இன்று பஜாரில் அந்தப் பெண்ணுடன் உங்களைப் பார்த்தது..?" என தன் சந்தேகத்தை மதுரா வினவினாள்.



"அதுவும் ஒரு கண்றாவிதான். வழக்கம் போல் மாதம் பிறந்து விட்டதேயென ஐநூறு ரூபாயை கொடுக்க அவளிடம் போனேன். பணத்தை அப்படியே பிடுங்கிக் கொண்டவள், இட்லி கடை ஒன்று ஆரம்பிக்கப் போகிறேன்... மார்க்கெட்டில் பழைய கொப்பரை கெட்டில் பாத்திரம் ஒன்று வாங்க வேண்டும். துணைக்கு நான் வரவேண்டும் என்று மழுக்காத குறையாய் என்னைக் கூட்டிச் சென்று விட்டாள். என்ன செய்வது? தலையை உள்ளே கொடுத்தாயிற்று. எடுக்க வழி தெரிய வேண்டுமே?"

சொல்லிவிட்டு அப்பாவியாய் விழித்த தந்தையை ஆச்சரியமாகப் பார்த்தாள். அவளை ஒரு சந்தேகம் குடைந்து கொண்டிருந்தது. அதை வெளிப்படையாய் தந்தையிடம் கேட்க தயக்கமாகவும் இருந்தது. ஆனாலும் வேறு வழி யில்லை. அவள் கேட்டுத்தான் ஆக வேண்டும்!

"அப்பா.. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் உங்களுக்கும் அந்தப் பெண்ணிற்கும் கொஞ்சம் கூட தொடர்பு.." என்று இழுத்தபடியே கேட்டே விட்டாள் மதுரா.

சிவராம் அவசரமாய் தலையாட்டி மறுத்தவர். "சே..! சே..! அந்த கண்றாவியெல்லாம் கொஞ்சமும் கிடையாதம்மா.. சொல்லப் போனால், அந்தப் பெண்ணின் மீது என் நிழல் கூட பட்டதில்லை. என் பயந்த சுபாவத்தைப் பயன்படுத்தி மிரட்டி இப்படி பணம் கறந்து கொண்டிருக்கிறார்கள். நானும் இதை எப்படி நிறுத்துவது? இதிலிருந்து எப்படி மீள்வது என தெரியாமல் விழித்துக் கொண்டு இருக்கிறேன்.."

ஆசுவாசமாய் மூச்சு வாங்கிக் கொண்டிருந்த அப்பாவைப் பார்க்க மதுராவுக்குப் பாவமாகத்தான் இருந்தது. சரியான வெகுளி. இந்த கலியுகத்தில் இப்படி ஏமாந்து பணிந்து யாராவது பணம் கொடுத்துக் கொண்டிருப்பார்களா?"

சிந்தித்த மதுராவுக்கு ஒருபுறம் நிம்மதியாகவும் இருந்தது. நல்ல வேளை! அவள் பயந்தது போல் அப்பா தப்புத் தண்டா எதுவும் செய்யவில்லை. அவரது வெகுளி சுபாவத்தால் ஏமாந்து இப்படி ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறார். இதிலிருந்து எப்படி இவரை காப்பாற்றுவது? யாரைக் கொண்டு விடுவிப்பது?

யோசித்தவளுக்கு சட்டென தனது அலுவலக மானேஜர் ஞாபகம் வந்துவிட்டது. மறுகணமே தனது பிரச்சினை யெல்லாம் தீர்ந்து விட்டது போல் நிம்மதி கொண்டாள் மதுரா.

மறுநாள் அவள் நினைத்தபடியே அலுவலக மானேஜர் தனக்குத் தெரிந்த போலீஸ் உயர் அதிகாரி மூலம் மதுராவின் தந்தையின் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார். பெரும் நிம்மதி கொண்டவளாய் அவருக்கு கண் கலங்க நன்றி சொன்னாள் மதுரா.

## 5



ஒரு வாரம் வேகமாய் ஓடிற்று. அன்று மதுரா அலுவலகத்திற்குச் சென்றதும் எம்.டி. அழைப்பதாய் பணியாள் வந்து சொன்னான். ஆச்சரியத்துடன் பாஸ்கரின் அறைக்குள் நுழைந்தாள், மதுரா.

அவள் நுழைந்ததும்தான் தாமதம், காத்திருந்தவனாய், காணாததைக் கண்டது போல் உடன் எழுந்து விட்டான் பாஸ்கர். அத்தனை பற்களையும் காட்டி டூத் பேஸ்ட் விளம்பரம் போல் சிரித்தவன் மதுரா முன் அந்த பார்சலையும் நீட்டினான்.

மதுரா புதிராய் அவனைப் பார்த்தாள்.

''என்ன சார்?''



''உனக்குத்தான்! பிரித்துப் பார்!''

மதுரா தயக்கத்துடன் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்த போது... உள்ளே சேலை! ஞாயிற்றுக்கிழமை பாஸ்கர் அவளை சேலைக் கடைக்கு கூட்டிச் சென்று தன் சகோதரிக்காக தேர்ந்தெடுக்கச் சொன்ன அதே சேலை.

''சார்... இது உங்கள் சகோதரிக்கு?''

''எனக்கு சகோதரியே கிடையாது. நான் சொன்னது பொய்..''

''அப்படியானால்..?''

''இது உனக்குத்தான். வைத்துக் கொள். என்னுடைய அன்புப் பரிசு..''

''அன்புப் பரிசா?'' - மதுரா உள்ளுக்குள் திடுக்கிட்டு குரலை உயர்த்தினாள்.

''அன்புப் பரிசுதான்! எனது அன்பை உனக்குத் தெரிவிக்க விரும்பினேன். அதை ஏதாவது பரிசுப் பொருள் மூலம் உணர்த்துவதுதான் சரியென்று தோன்றியது. அதனால் உனக்குப் பிடித்த சேலையை உன்னைக் கொண்டே தேர்ந்தெடுக்கச் சொன்னேன்..''

சொல்லிவிட்டு பாஸ்கர் ஏதோ பெரிய இரகசியத்தை உடைத்தது போல் திரும்பவும் சிரித்தான். மதுராவுக்குப் பற்றிக் கொண்டுதான் வந்தது. அன்புப் பரிசாம்! எனக்குப் பரிசு கொடுக்க இவன் யார்? அப்படியே அந்த சேலையை அவன் முகத்தில் விட்டு எறிய வேண்டும் போல்தான் இருந்தது. ஆனாலும் முதலாளியாயிற்றே..!

அடக்கிக் கொண்டாள். வலுக்கட்டாய புன்முறுவல் ஒன்றை அவசரமாய் கொண்டு வந்து, ''மன்னித்துக் கொள்ளுங்கள் சார். நான் யாரிடமும் இலவசமாகவோ பரிசாகவோ எதையும்

வாங்குவதில்லை. அது எனக்குப் பிடிக்காத விசயம்'' என்றாள் குரலில் எவ்வித உணர்ச்சியுமின்றி.

பாஸ்கர் விடவில்லை. ''என்னிடம் கூடவா?'' என்றபடி அவள் மீதான பார்வையை ஆழமாக்கினான்.

''உன்னிடம் மட்டும்தான்..!'' என்று சொல்லத் துடித்த உதடுகளை மதுரா அடக்கிக் கொண்டாள். எப்படியாவது அந்தச் சூழ்நிலையிலிருந்து விடுபட விரும்பியவளாய் டக்கென பேச்சை அலுவலக விஷயத்திற்கு மாற்றினாள். ''சார், அந்த அம்பது லட்ச ரூபாய் கட்டுமான காண்டிராக்ட் பற்றிய விபரங்கள் கேட்டிருந்தீர்களே...? போதுமான விசயங்களை புள்ளி விபரங்களை சேகரித்து விட்டேன். அதை ஒழுங்கு படுத்தி உங்கள் ஒப்புதலுக்கு அனுப்பட்டுமா? டெண்டருக்கு இன்னும் இரண்டு நாட்களே இருக்கிறது சார்..''

மதுரா பேச்சை மாற்றி நழுவுவதை உணர்ந்து கொண்ட பாஸ்கர் வேறு வழி தோன்றாதவனாய் அசட்டையாய் தலையசைத்தான். ''ம்ம்... அனுப்பு'' என்றான் தோய்ந்த குரலில்.

அவனது அறையிலிருந்து தப்பித்தோம், பிழைத்தோம் என வெளியே ஓடி வந்தாள் மதுரா. பரிசு கொடுக்கிறானாம் பரிசு! யாருக்கு வேண்டும் இவனது பரிசு!''

அவளுக்கு பரிசு கொடுக்க தகுதியானவன் வசந்தன் ஒருவன்தான். வசந்தன் பிறந்த நாளுக்கு மதுராவுக்கு அழகிய பேனா செட் ஒன்றை பரிசளித்தான். அதை இன்றுவரை பொன் போல் பாதுகாத்து வருகிறாளே? அதை ஒருநாள் எடுத்துப் பார்க்காவிட்டால் அவளுக்கு தூக்கம் வராதே!

அப்படிப்பட்டவளிடம்.. எவ்வளவு தைரியமிருந்தால்... சேலையை பரிசளிப்பான் இந்த பாஸ்கர்? மூச்சு வாங்க



இருக்கைக்கு வந்து யோசித்தவளை மறுகணமே எழுந்த மின்னல் கீற்று திகைக்க வைத்தது.

பாஸ்கர் ஏன் நமக்கு சேலையை பரிசளிக்க வேண்டும்! அதுவும் நம்மை வைத்தே சகோதரிக்கு சேலை எடுப்பது போல் பொய் சொல்லி... ஒருவேளை பாஸ்கர் மனதில் அப்படி ஒரு எண்ணம் இருக்குமோ?

மதுராவும் கவனித்து விட்டாள். கடந்த ஒரு மாதமாய் பாஸ்கரின் போக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. தேவை யில்லாமல் அடிக்கடி அவளை அழைத்து பேசி வழிவதும், அசட்டுப் புன்னகையை முகத்தில் வண்டி வண்டியாய் ஓட விடுவதும், ஏதோ பெரிய மன்மதன் போல் அடிக்கடி அவள் மீது ரோமண்டிக் லுக் விடுவதும்.. எல்லாம் அவளுக்கு எதையோ உணர்த்திற்று.

ஒருவேளை பாஸ்கர் என்னை விரும்புகிறானோ? நான் உன்னை விரும்புகிறேன், உன்னை காதலிக்கிறேன் மதுரா என்று தத்துப்பித்தென உளறி விடுவானோ? என்றெல்லாம் பயம் அவளுக்குள் உண்டாயிற்று.

அவள் பயந்த மாதிரியே இருந்தது. அங்கே தன் அறைக்குள் பாஸ்கர் புழுங்கித் தவித்துக் கொண்டிருந்தான். ஆசை ஆசையாய் கொடுத்த சேலையை வேண்டாம் என்று சொல்லி விட்டாளே? உண்மையிலே அவளுக்கு பரிசு பிடிக்காதா? இல்லை என்னிடம் சேலை வாங்க இஷ்டமில்லாமல் மறுத்து விட்டாளா?

விடை தெரியாமல் குழம்பிய பாஸ்கர் மதுராவைப் பற்றி மேலும் தீவிரமாய் சிந்திக்கத் தொடங்கினான். அவன் மனதில் சில திட்டங்கள் உருவாகத் தொடங்கியது.

# 6



மதுரா அதன் பிறகு பாஸ்கர் விஷயத்தை மறந்தே போனாள். அவளுக்கு வசந்தன் பற்றிய கவலை வந்துவிட்டது.

அன்று மாலை வழக்கம் போல் அவளைப் பூங்காவில் சந்தித்த வசந்தன் அந்த விசயத்தைச் சொன்னான். தங்கை சித்ராவுக்கு இம்முறையும் ஒரு நல்ல வரன் வந்ததாம். ஆனால் முடியவில்லையாம். பேச்சுவார்த்தை முறிந்து விட்டதாம்.

வருத்தம் தோய்ந்தவனிடம் "ஏன் வசந்தன்?" என கேள்வி கேட்க வினோதமாகப் பார்த்தான் அவன்.

"வேறென்ன? அதிக நகை கேட்கிறார்கள். அதிக பணம் கேட்கிறார்கள், நான் எங்கே போவது?"

கைகளைப் பிசைந்தவனை பரிதாபத்தோடு பார்த்தாள் மதுரா. அவளையும் கவலை பற்றிக் கொண்டது. சித்ராவுக்கு நல்ல இடத்தில் கல்யாணம் செய்துவிட்டுத்தான் வசந்தன் தன்னைப் பற்றி யோசிக்க முடியும்! சித்ராவுக்கு வரன் அமையாமல் தள்ளிப் போக.. போக... அவர்களது திருமணமும் அல்லவா கைகூடாமல் தள்ளிப் போய்க் கொண்டு இருக்கிறது?

இருவரும் மணல் பரப்பினை கைகளால் கீறியபடி வெறித்த பார்வையுடன் ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தனர்.

சிறிது நேரத்தில் வசந்தன்தான் நிமிர்ந்து மவுனம் கலைத்தான்.

"மதுரா நாளை சனிக்கிழமை உனக்கு லீவுதானே?"

மதுரா தலையசைத்தாள்.



"அப்படியானால் நாளை வீட்டுக்கு வாயேன். சித்ரா உன்னைப் பார்த்து ரொம்ப நாளாயிற்று.. என்றாள். அவளுக்கு உன்னிடம் பேசினால் மனப்பாரம் குறையும்.."

"கண்டிப்பாக வருகிறேன்.." என்றாள் மதுரா.

மறுநாள் மாலை சொன்னபடியே சித்ராவுக்குப் பிடித்த மைசூர் பாகை வாங்கிக் கொண்டு வசந்தன் வீடு நோக்கிப் போனாள் மதுரா.

வசந்தன் வீடு மில்லிற்கு பக்கத்தில் உள்ள ஆசிரியர் காலனியில் இருந்தது. வசந்தனின் தந்தை குருநாதர், தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். வேலை பார்க்கும் காலத்திலே லோன் போட்டு வீட்டையும் கட்டி விட்டார்.

வீடு பார்ப்பதற்கு சிறிதாய் இருந்தாலும் சிறு சிறு அறைகளுடன் அழகாகவும் இருக்கும். முன்புறம் விஸ்தாரமான புல்தரை, சுற்றிலும் காற்றோட்டமான திறந்தவெளி. வசந்தனுக்கு செடி வகைகளில் தோட்ட வேலைகளில் அதீத ஈடுபாடு உண்டு. ரோஜா செடிகள், குரோட்டன்ஸ், மணி பிளாண்ட் என வீட்டைச் சுற்றி விதவிதமான செடிகளை நட்டு வைத்து பூந்தோட்டம் போல் ஆக்கியிருந்தான்.

வழக்கம் போல் அவைகளை ரசித்தபடி மதுரா வீட்டினுள் நுழைந்தாள். முகப்பறையிலே ஏதோ புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்த வசந்தன் முகமலர்ந்து ஆவலாய் அவளை வரவேற்றான்.

"சித்ரா, யார் வந்திருக்கிறாங்க பார்!" என்றான் உற்சாகமாய்.

உள்ளிருந்து சித்ரா ஓடோடி வந்துவிட்டாள்.

''மதுராக்கா..'' என்று அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள். மைசூர் பாகை அவள் கைகளில் திணித்த மதுரா ''முதலில் நீ உனக்குப் பிடித்த இனிப்பு சாப்பிடுவியாம். பிறகு நாம் மணிக்கணக்காகப் பேசுவோமாம்..'' என்றாள் சிரிப்புப் பொங்க.

சொன்னபடியே கிணற்றடிப் பக்கம் உட்கார்ந்து இருவரும் பேச ஆரம்பித்து விட்டனர். வசந்தனும் அவர்கள் பேசட்டும் என்று தலையிடாமல் முன்புறமே இருந்துவிட்டான். மதுராதான் அடிக்கடி திரும்பி வசந்தன் வரமாட்டானா என்று தங்களோடு பேச்சில் கலந்து கொள்ள மாட்டானா என்று ஏங்கிக் கொண்டிருந்தாள்.

மதுரா எதிர்பார்த்தபடி கடைசி வரை வசந்தன் வரவே இல்லை. பேசி முடித்து அவள் கிளம்பும்போதுதான் பஸ் ஸ்டாப் வரைக்கும் அவளுக்குத் துணைக்கு வருவதாய் வசந்தன் கிளம்பினான்.

''அப்பாடா..! இப்பவாவது வந்தானே..'' என ஆறுதல் பட்டவளாய் மதுரா சித்ராவிடமும் குருநாதரிடமும் விடை பெற்று வசந்தனுடன் புறப்பட்டாள்.

நடக்கையில் அவளையறியாமலே அடிக்கடி வசந்தனை திரும்பிப் பார்த்தபடி நடந்தாள். அவனது அடர்ந்த முடி, பரந்த நெற்றி, நல்ல உயரத்துடன் கூடிய வனப்பான உடற்கட்டு, பளபளப்பான முகம் எல்லாமே வசீகரமாய் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது.

வசந்தனும் அவள் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து அவனும் கண்களை விரித்துப் பார்த்தான். தங்கப் பதுமை போன்ற மதுராவின் அழகு, அவளது உடம்பில் ஓடும் இயற்கையான நளினம் எல்லாம் அவனை கிறங்கடித்தது. நிச்சயம் இவள் பேரழகிதான்! என முணுமுணுத்துக் கொண்டான்.



வசந்தனும் தன்னையே பார்ப்பதை உணர்ந்து மதுரா நாணமுற்றவள், ''என்ன சொன்னீர்கள்?'' என்றாள் அவன் பேசியதை கேட்டுவிட்டதைப்போல.

''ஒன்றுமில்லை! நீ பேரழகிதான். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை..!'' என்றான் சிரித்தபடி.

''அப்படியா?'' மதுரா போலியாய் வியப்புக் காட்டினாலும், உள்ளூர ரொம்பவும் மகிழ்ந்தவளாய் அவனையேப் பார்த்தாள்.

''ஆனால் இந்த பேரழகை சொந்தமாக்கிக் கொள்ள முடியவில்லை என்றுதான் கவலையாய் இருக்கிறது. எட்டி நின்றே ரசித்துக் கொண்டிருக்கிறேன்.''

''ஏனாம்?''

''எல்லாம் சித்ரா விஷயம்தான்! அவளுக்கு ஒரு வரன் தேடுவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. நமக் கேற்ற... நாம் விரும்புகிற வரன் அமையுமா? என்று கவலை யாயும் இருக்கிறது..''

''கவலைப்படாதீர்கள்! கண்டிப்பாக அமையும்!'' என்று மதுரா ஆறுதல் படுத்தினாள்.

இருவரும் பஸ் ஸ்டாப்பை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். பஸ் ஸ்டாப் இன்னும் தொலைவில் இருக்கக் கூடாதா... என்று மதுரா நினைத்தாள். அப்படியே பஸ் ஸ்டாப்பை அடைந்து விட்டாலும் உடன் பஸ் வரக் கூடாது என உள்ளூர வேண்டியும் கொண்டாள்.

வசந்தன் பேச்சை மாற்றி அவள் வேலை பற்றி, தங்கை, தந்தையைப் பற்றியெல்லாம் அக்கறையாய் விசாரிக்க ஆரம்பித்து விட்டான். மதுரா பெருமிதமடைந்தவளாய் பதில் கூறியவள், அவனையும் ஒரு நாள் தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தாள்.

வசந்தனும் சம்மதித்து அடுத்த வாரம் வருவதாய் உறுதியளித்தான்.

இருவரும் சேர்ந்து நடந்ததாலோ என்னவோ தோளும் தோளும் இடித்து கைகள் உராய்ந்து அவர்களை அறியாமலே விரல்களோடு பின்னிக் கொண்டனர்.

வசந்தனும் சரி, மதுராவும் சரி தற்செயலாய் நடந்த கைகோர்ப்பை விலக்க மனமில்லாமல் நடந்தனர். மனதிற்குள் இனம் புரியா சந்தோஷம் கிளர்ச்சியாய் இருவரையும் தாக்கியது.

அவர்கள் அப்படி ஜோடியாய் கைகோர்த்தபடி நெருக்கத்துடன் நடந்து செல்வது எதிர் பிளாட்பாரத்தில் தற்செயலாய் நடந்து கொண்டிருந்த பாஸ்கரின் கழுகுக் கண்களில் விழவும் செய்தது.

## 7



பாஸ்கர் அந்தக் காட்சியை சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவன் ஆசை ஆசையாய் நினைத்துக் கொண்டிருக்கும் மதுராவோடு இன்னொருவன். இருவரும் நெருக்கமாய் கைகோர்த்துச் செல்வதைக் கண்டு துடித்துப் போய்விட்டான்.

அவனால் ஒருகணம் நம்பக் கூட முடியவில்லை. நம்பாதவனாய் கண்களை உருட்டி உற்றுஉற்றுப் பார்த்தான். சந்தேகமே இல்லை. அது மதுராவேதான்! கூடச் செல்லும் அந்த இளைஞனை உற்றுப் பார்த்தான். பாஸ்கருக்கு அவனை இதற்கு முன் பார்த்த ஞாபகம் கொஞ்சமும் இல்லை.

இருந்தும் அவன் யாரென்று உடனே கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற நினைப்பில் கண்களை அகல விரித்து அவனை நன்கு படம் பிடித்துக் கொண்டான்.



அதற்குமேல் அந்தக் காட்சியைப் பார்க்க சகிக்காதவனாய் டக்கென காரில் ஏறி பங்களாவுக்கு திரும்பி விட்டான். வந்தவன் படுக்கையில் விழுந்து தீவிரமாய் யோசித்தான்.

தான் கொடுத்த சேலையை மதுரா ஏன் வாங்காமல் மறுத்து விட்டாள் என்பதற்கான காரணமும் அவனுக்குப் புரிந்தது. ஆக மதுராவுக்கு ஒரு காதலன் இருக்கிறான். மதுரா அவனைக் காதலிக்கிறாள். அவன் யாரென்று கண்டுபிடித்தாக வேண்டும்!

பாஸ்கர் தீவிரமாய் யோசித்தவனுக்குச் சட்டென அவனது 'துப்பறியும்' நண்பனின் நினைவு வந்துவிட்டது.

அவன் பெயர் குமார். நகரில் 'பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்ஸி' ஒன்று நடத்தி வருபவன். தனிப்பட்ட முறையில் தன்னைத் தேடிவரும் வாடிக்கையாளர்களுக்காக ஜேம்ஸ் பாண்ட் போல் செயல்பட்டு தேவைப்படும் விஷயங்களை ரகசியமாய்த் திரட்டித் தருபவன். பாஸ்கரின் முதல் வருட கல்லூரித் தோழன்.

அவன் நினைவு வந்ததும் அவன்தான் இதற்கு சரியான ஆள் என்று பாஸ்கர் தீர்மானித்துக் கொண்டான். உடனே அவனது அலுவலக நம்பருக்கு டயல் செய்தான். மறுமுனையில் அவன் கிடைத்ததும் மதுரா பற்றி சகல விசயத்தையும் அவனுக்கு விளக்கினான். மதுராவின் உடன் சுற்றும் அந்த இளைஞன் யார்? அவன் மதுராவின் காதலன்தானா? அவனைப் பற்றிய குடும்ப விவரங்கள் அனைத்தும் தனக்குத் தேவை. உடனே விசாரித்துக் கண்டுபிடிக்கும்படி அவனிடம் கேட்டுக் கொண்டான்.

இரண்டு நாட்கள் ஓடிற்று. குமார் ஜேம்ஸ்பாண்ட் வேலை பார்த்து எல்லா விஷயங்களையும் கறந்து விட்டான். மதுரா விரும்பும் வசந்தனைப் பற்றிய சகல விபரங்களையும் திரட்டி பாஸ்கரின் பார்வைக்கு வைத்து விட்டான்.

பாஸ்கரும் அதிர்ந்துதான் போனான். அவன் மதுரா பற்றி இவ்வளவு தூரம் நினைக்கவில்லை. ஏதோ இருவரும் பழகி வருகிறார்கள் என்றுதான் நினைத்தான். ஆனால் இருவரும் கல்யாணம் செய்யும் அளவுக்கு போய்விட்டார்கள். வசந்தனின் தங்கை சித்ராவுக்கு சரியான வரன் அமையாததால்தானே அவர்களது திருமணம் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது என்பதும் அவனுக்குப் புரிந்தது.

சரியான தருணத்தில்தான் நாம் கண்டுபிடித்திருக்கிறோம் என்று தன்னைத்தானே மெச்சியும் கொண்டான்.

உடனே பாஸ்கர் அவர்களது காதலை உடைக்க வழி ஏது என்பது பற்றி சிந்திக்க ஆரம்பித்து விட்டான்.

மின்னலாய் யோசித்தவனுக்கு சட்டென ஒரு குறுக்கு வழியும் புலப்பட்டது. அதன்படி செய்தால் மதுராவின் காதலன் வசந்தனுக்கு நெருக்கடியை, குடும்பப் பொருளாதார சிக்கலை உண்டுபண்ண முடியும். அப்படி உண்டு பண்ணினால் அவர்களது காதல் உடைய வாய்ப்பு இருப்பதாகவும் எண்ணினான்.

அப்படி வசந்தனுக்கு இடைஞ்சல் கொடுக்க பாஸ்கர் தேர்ந்தெடுத்த வழியும் கொடூரமானதுதான்! வசந்தன் வேலை பார்ப்பது பைனான்ஸ் கம்பெனி ஒன்றில். அந்த கம்பெனியின் முதலாளி பாஸ்கருக்கு வேண்டியவர். அவனுக்கு நன்கு தெரிந்தவர்.


அவர் மூலம் எப்படியாவது ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி வசந்தனை வேலையை விட்டு நீக்கும்படி செய்துவிட வேண்டும். இதுதான் பாஸ்கர் போட்ட சூழ்ச்சியான திட்டம்.

அதை எப்படியும் நிறைவேற்றி விட வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டான். வெற்றியும் கண்டான். அடுத்த



ஒரு வாரத்தில் பாஸ்கர் நினைத்தபடியே திடுமென வசந்தனுக்கு வேலையும் போயிற்று.

## 8



வசந்தன் அதை எதிர்பார்க்கவில்லை. திடுமென அவனுக்கு 'சஸ்பென்ஷன் ஆர்டர்' கொடுக்கப்பட்டது. கோபம் பொங்க மேனேஜரின் அறைக்குள் நுழைந்து ஆர்டரை வேகமாய் அவரது மேஜையில் வீசினான்.

மேனேஜர் நிதானமாகப் பார்த்தார். விளக்கினார். வேலைக்குத் தேவையான திறமை அவனிடம் இல்லையாம். வேலையில் சுறுசுறுப்பு காட்டுவதில்லையாம். அதனால்தான் வேலையிலிருந்து தூக்கிவிட்டார்களாம்.

மேனேஜர் சொல்லச் சொல்ல வசந்தனுக்கு ஆவேசம் பொங்கியது. அடக்கிக் கொண்டான். வேண்டுமென்றே தன் மீது பழி சுமத்தி வேறு ஏதோ ஒரு காரணத்திற்காக வேலையை விட்டு நீக்கி விட்டார்கள் என்பதையும் புரிந்து கொண்டான்.

அது புரிந்ததும் அவர்களிடம் அவனுக்கு கெஞ்ச மனமில்லை. ''உங்கள் வேலையும் வேண்டாம், மண்ணும் வேண்டாம்..'' என்ற வீராப்புடன் வெளியே வந்துவிட்டான்.

வசந்தன் வேகமாய் வெளிவந்துவிட்டானே தவிர, அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வெளியே போகாமல் இரண்டு நாள் வீட்டிற்குள் முடங்கிக் கிடந்தான்.

மதுராவுக்கு வசந்தனுக்கு வேலை போய்விட்ட விஷயம் எப்படியோ தெரிந்து விட்டது. துடித்துப் போய் அன்று மாலையே அவனைப் பார்க்க வந்துவிட்டாள்.

சோகமாய் இருந்தவனை ஆறுதல்படுத்தினாள். ''வசந்தன் இதற்குப் போய் ஏன் வருந்துகிறீர்கள்? இந்த வேலை போய்விட்டால் இன்னொன்று..''

வசந்தன் சோகம் விலகாமல் புன்னகைத்தான்.

''அப்படித்தான் நானும் நினைத்தேன் மதுரா. ஆனால்..''

''சொல்லுங்களேன்..''

''வேலை தேடி ஒவ்வொரு அலுவலகமாய் ஏறி இறங்கும் போது தான் அது எவ்வளவு கஷ்டமானது... குதிரைக் கொம்பான விஷயம் என்பது புரிகிறது..''

''அப்படியா? வேலை தேடி முயற்சி செய்தீர்களா?''

வசந்தன் தலையசைத்தான். ''மதுரா, நானும் ஓரளவு பரிச்சயமான நாலைந்து அலுவலகங்களுக்குச் சென்று கேட்டுப் பார்த்துவிட்டேன். யாரும் பிடி கொடுத்துப் பேசுவதில்லை. வேலை கிடைப்பதற்கான சாத்தியமும் இல்லை போலவே தோணுகிறது.''

மதுரா நெற்றியில் கை வைத்து தீவிரமாய் சிந்தித்தவள் சட்டென பிரகாசம் வந்தவளாய் நிமிர்ந்தாள்.

''வசந்தன்..''

''என்ன மதுரா?''

''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது..''

''யோசனையா?''

''ஆமாம். பேசாமல் எங்கம் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து விடுகிறீர்களா?''

''உங்கள் கம்பெனியிலா?''



''ஆமாம். எங்கள் எம்.டி. எனக்கு ரொம்பத் தெரிந்தவர்தான். நிர்வாகப் பிரிவிற்கு திறமையான ஆட்கள் தேவை என அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்..''

''அப்படியானால்... எனக்கு வேலை கிடைக்குமா?''

''கண்டிப்பாக கிடைக்கும். நான் சொன்னால் மறுபேச்சின்றி உங்களுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை கொடுத்து விடுவார்.''

வசந்தன் மறுபடியும் சிந்தனைக்குத் தாவ அவனைப் பிடித்து உலுக்கினாள்.

''என்ன யோசிக்கிறீர்கள்?''

''ஒன்றுமில்லை. உன் கம்பெனியில் உன் அருகிலேயே உட்கார்ந்து வேலை பார்ப்பது எவ்வளவு சுகமாக இருக்கும் என்று எண்ணிப் பார்த்தேன்.''

வசந்தன் அப்படிச் சொன்னதும் மதுராவும் மலைக்கத்தான் செய்தாள். வசந்தனுக்கு மட்டும் அவளது கம்பெனியில் வேலை கிடைத்து விட்டால்..எப்படி இருக்கும்? தினம் தினம் நொடிக்கு நொடி அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கலாமே?

ஒருகணம் தன்னை மறந்து கனவுலகில் சஞ்சரித்தவள் நினைவுகளில் மீண்டு சுயநினைவிற்கு வந்தாள்.

''வசந்தன், நாம் காலம் தாழ்த்தக் கூடாது. நாளை காலை சரியாக பத்து மணிக்கு என்னுடைய அலுவலகம் வந்து விடுங்கள். உங்கள் வேலை விசயமாய் எம்.டி.யிடம் பேசிவிடுவோம்..''

''மதுரா சொல்ல.. உற்சாகமாய் தலையசைத்தான் வசந்தன்.

மறுநாள், காலை பத்து மணி.

எம்.டி. பாஸ்கரின் பிரத்யேக அறைக்குள் வசந்தனுடன் நுழைந்தாள் மதுரா.

வசந்தனைக் கூட்டிக் கொண்டு தன்னைப் பார்க்க வந்த மதுராவைக் கண்டு திடுக்கிட்டுப் போனான் பாஸ்கர்.

## 9



பாஸ்கருக்கு ஒருகணம் ஒன்றும் புரியவில்லை. தான் யாரை திட்டம் போட்டு வேலையை நீக்கச் செய்தானோ அவனோடு மதுரா தன் அறைக்குள் நுழைந்தது அவனை அதிரச் செய்தது.

ஒருவேளை தனது குட்டு வெளிப்பட்டு விட்டதோ, வசந்தனுக்கு வேலை போக தான் தான் காரணம் என்பதை மதுரா கண்டுபிடித்து விட்டாளோ என்று பயந்து போனான்.

ஆனால் மதுரா புன்னகையுடன் வந்தது அவனது பயத்தைப் போக்கியது. முதல் முறையாய் நேருக்கு நேர் வசந்தனைப் பார்த்தான். அவன் முகத்தில் பொறாமை பொங்கி வழிந்தது. அவனது சொந்தமான, அவனுக்கே சொந்தமான மதுராவை அபகரிக்க வந்தவன் போல் வசந்தனை முறைத்தான். பார்வையால் விழுங்கினான்.

அவனது நோக்கம் புரியாமல் தன்னைத்தானே பாஸ்கர் உற்றுப் பார்ப்பதாய் நினைத்து வசந்தனும் பவ்யம் பொங்க கைகூப்பினான்.

மதுரா தன் முத்துப் பற்கள் அத்தனையும் காட்டியவாறு வசந்தனை அறிமுகப்படுத்தினாள்.

''சார், இவர் பெயர் வசந்தன். என்னுடைய நெருங்கிய உறவினர். எம்.காம். படித்திருக்கிறார். கணக்கு வழக்குகளில்



நல்ல திறமைசாலி. தற்சமயம் இவருக்கு வேலை இல்லை. நம் அலுவலகத்தில் ஏதும் வேலை இருக்குமா சார்?''

கெஞ்சும் குரலில் மதுராவின் குரல் ஒலித்தபோது, பாஸ்கர் கிறங்கித்தான் போனான். அவனது உள்மனம் கூடவே ஆனந்தமாய் குதித்தது. 'வசந்தனை வேலையை விட்டுத் தூக்கியதே நான்தான். என்னிடமே வேலை கேட்டு வந்துவிட்டாயா? நல்ல வேடிக்கைதான்!'

நினைத்தபடியே சிந்திப்பவன் போல் நெற்றியில் கை வைத்துக் கொண்டான் பாஸ்கர். உள்ளபடியே அவனது மனம் வேகமாக சிந்தித்தது. மின்னலாய்க் கணக்கிட்டது. 'இந்த வசந்தனுக்கு நாம் வேலை கொடுக்காவிட்டால், நிச்சயம் எங்காவது வேலைக்குச் சேர்ந்து விடுவான். பின் நாம் நினைத்த பொருளாதார சிக்கலை அவனுக்கு உண்டுபண்ண முடியாது. அதற்குப் பதில் நாமே வேலை கொடுத்து நமக்குக் கீழ் அவனை வேலைக்கு வைத்துக் கொண்டால்..?'

எண்ணிப் பார்த்த பாஸ்கருக்கு அதுவும் சிறந்த யோசனையாகவே தோன்றியது. நம் கீழ் வசந்தனை வேலைக்கு வைத்து கொண்டால் எளிதாக அவனது நடவடிக்கைகளை கவனிக்க முடியும். அதுவே மதுராவிடமிருந்து வசந்தனைப் பிரிப்பதற்கு வசதியாய் இருக்கும்.

பாஸ்கர் மனதுக்குள் எண்ணியவன் மதுராவின் வேண்டுகோளை உடனே ஏற்றுக் கொண்டான். வசந்தனுக்கு உடனடியாக நிர்வாகப் பிரிவில் வேலையும் போட்டுக் கொடுத்தான்.

வேலை கிடைத்ததும் வசந்தனும் மதுராவும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பாஸ்கருக்கு காலில் விழாத குறையாய் தங்களது நன்றியை தெரிவித்துவிட்டு வெளியே வந்தனர்.

அறையை விட்டு வெளி வந்ததும் வசந்தன் மதுராவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "ரொம்பவும் நன்றி மதுரா... இந்த உதவியை ஒருபோதும் மறக்க மாட்டேன்.." என்றான் கண்கலங்க.

மதுரா ஒருகணம் நெகிழ்ந்து போனவள் அவனை உலுக்கி, "என்ன இது? எனக்குப் போய் நன்றி அது இதுவென சொல்லிக் கொண்டு.." என செல்லமாய் கடிந்தவள், "எம்.டி.க்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். அவர் இப்படி உடன் வேலை கொடுத்து விடுவார் என்று நான் கொஞ்சமும் நினைக்க வில்லை!'

மதுரா வியக்க வசந்தனும் ஆச்சரியம் பொங்க, "ஆமாம் மதுரா. நான்கூட என்னவோ நினைத்தேன். உன் முதலாளி ரொம்பவும் நல்லவராக இருக்கிறார். நல்ல மனது அவருக்கு..!" என்று சர்டிபிகேட்டும் கொடுத்தான்.

வெளியே பாஸ்கர் இருவரும் நல்லவனாக உருக்கொடுத் துக் கொண்டிருக்க... அறையின் உள்ளே விஷமத்தனமாய் சிந்தித்துக் கொண்டிருந்தான் பாஸ்கர்.

முதலில் மதுராவுக்கு வசந்தன் மீது வெறுப்பு வரும்படியாக ஏதாவது செய்தாக வேண்டும். என்ன செய்வது..? பாஸ்கர் நினைக்க... நினைக்க.. அவனுக்கு டைப்பிஸ்ட் திலகாவின் ஞாபகம் வந்தது.

## 10



டைப்பிஸ்ட் திலகா பாஸ்கருக்கு வேண்டியவள். தன் அத்தனை பல்லையும் இளித்துக் காட்டிக் கொண்டு அவனையே சுற்றி வருபவள்.



மின்னலாய் யோசித்த பாஸ்கர் அவளை தன் பகடைக் காயாய் உபயோகிக்க முடிவு செய்தான். அவளை வைத்து மதுராவுக்கு வசந்தன் மேல் வெறுப்புக் கொள்ளச் செய்து விட்டால் போதும். காரியம் சுளுவாகி விடும். அதன் பின் தனக்கும் மதுராவுக்கும் இடையே வசந்தன் குறுக்கே வர முடியாது எனவும் பாஸ்கர் நினைத்தான்.

வசந்தனை வேலைக்குச் சேர்ந்த நிர்வாகப் பிரிவிற்கு உடனடியாக டைப்பிஸ்டாக திலகாவை மாற்றி அமைத்தான். அதன்படி வசந்தனும் திலகாவும் ஒரே அறையில் எதிர் எதிர் இருக்கையில் வேலை பார்க்கும்படி ஆயிற்று.

திலகாவும் சளசளவென பேசக் கூடியவள். தனது கறுப்பு நிற அழகை *சீவிச் சிங்காரித்துக்* கொண்டு தளுக்கு மினுக்கு நடையுடன் யாரை வளைத்துப் போட..! என்பது போல்தான் அலைவாள். அப்படிப்பட்டவளுக்குக் கம்பீரமான திடகாத்திர உருவத்துடன் வந்த வசந்தனைப் பார்த்ததும் குளிர் ஆட்டத் தான் செய்தது.

"அலோ உங்க பேரு வசந்தனா?" என்று முதல் நாளே வசந்தனிடம் பேச்சுக் கொடுத்து விட்டாள்.

வசந்தன் தலையாட்டியதும், "நிஜமாவே வசந்தம் மாதிரிதான் நீங்க இருக்கீங்க.." என்றவள், "என்னோட பெயர் தெரியுமா உங்களுக்கு?" என்றாள் புதிர் போடுபவள் போல்.

வசந்தன் நெற்றியைச் சுருக்கியபடி அவளைப் பார்த்தான்.

"என்னோட பெயர் திலகா, என்னைப் பார்த்தா உங்களுக்கு என்ன தோணுது?" என்றாள் மறுபடியும்.

வசந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவளை மேலும் உற்றுப் பார்த்துவிட்டு உதடுகளை பிதுக்கினான்.

"ஒன்றும் தோன்றவில்லை! நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?"

"அட... இதுகூடவா புரியவில்லை! என் முகத்தை நன்றாக உற்றுப் பாருங்கள். தெரியவில்லை..! என் அழகு பளீச்சிட வில்லை..! நான் கல்லூரியில் மிஸ் குயினாக தேர்ந்தெடுக் கப்பட்டவள். எங்கள் கல்லூரியிலேயே நான்தான் பேரழகி! அதைத்தான் சொல்ல வந்தேன்.."

திலகா கதை போல சொல்லி முடிக்க அவளது சுய தம்பட்ட கதையை பொறுமையாய் கேட்டுக் கொண்ட வசந்தன், "அப்படியா?" என போலி வியப்பும் காட்டினான்.

ஆனால் திலகா அத்தோடு விடவில்லை. மறுபடி மறுபடி அவனிடம் பேச்சுக் கொடுத்தாள். ஒன்றுமில்லாத விஷயத்தை பெரிதாய் சொல்லி ஹாஸ்யம் கண்டதுபோல் சிரிக்கவும் செய்தாள்.

வசந்தனுக்குத்தான் எரிச்சலாய் இருந்தது. இப்படியொரு அறுவையிடம் போய் வசமாய் மாட்டிக் கொண்டோமே என்று அவஸ்தை கொண்டான். அவனால் அலுவலக நேரத்தில் மதுராவை சந்திப்பது கூட கடினமாயிற்று.

மதுரா வேறு பிரிவில் இருந்தாள். மெனக்கெட்டு அவளைத் தேடிச் சென்று பேசவும் முடியாது. மற்ற ஊழியர்கள் முன் அப்படிப் பேசுவது நாகரிகமாயும் இருக்காது.

மதிய இடைவேளையின்போதுதான் மதுராவைப் பார்த்துப் பேச முடியும். அவன் டிபன் பாக்சுடன் சாப்பாட்டு அறைக்குள் நுழையும்போதே சிவ பூஜை வேளை கரடி போல் திலகா அங்கு தயாராய் காத்திருப்பாள்.

மதுராவுக்கும் வசந்தனுக்கும் வேறு வழி தெரியவில்லை. முகத்தில் அடித்தாற் போல் திலகாவிடம் பேச முடியாதவர்



களாய் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு இருப்பர். திலகா அவர்களது நிலைமை புரியாது விடாது சளசளக்கத் தொடங்கி விடுவாள்.

திலகா விடாது வசந்தனையே துரத்தி துரத்தி பேசுவது கண்டு பாஸ்கர் குளிர்ந்து போனான். அவன் எப்படி நினைத் தானோ அப்படியே காரியங்கள் நடப்பது கண்டு மகிழ்ச்சி யடைந்தான்.

அவன் உன்னிப்பாய் கவனித்ததில் அவனுக்கு ஒரு விசயம் தெளிவாய் புரிந்தது. திலகாதான் ஆவலாய் வசந்தனைத் தேடித் தேடி போய் பேசுகிறாளே தவிர... வசந்தன் அவளை விட்டு விலகியே சென்று கொண்டிருந்தான்.

ஆக.. அவனுக்கு திலகா மேல் கொஞ்சமும் ஈடுபாடு வரவில்லை. அவன்தான் மதுராவைக் காதலிக்கிறானே! பிறகு ஏன் திலகாவை... நிமிர்ந்து பார்க்க வேண்டும்?

யோசித்த பாஸ்கர் மனதில் விபரீதமாய் திட்டமொன்றும் எழுந்தது. எப்படியாவது வசந்தனுக்கும் திலகாவிற்கும் தொடர்பு இருப்பது போல் மதுராவை நம்ப வைத்துவிட்டால் போதும், காரியம் சுளுவாகி விடும். மதுரா வசந்தனை வெறுக்கத் தொடங்கி விடுவாள்.

அதன் பிறகு எளிதாக காதல் வலைவீசி மதுராவை தன் பக்கம் இழுத்து விடலாம். தன்னைக் காதலிக்க வைத்து விடலாம்.

பாஸ்கர் வேகமாய் மனதுள் கணக்குப் போட்டவன் பின்னலாய் அதற்கான காரியங்களிலும் ஈடுபட்டான்.

## 11



அடுத்த வாரமே கம்பெனியின் ஆடிட்டிங் பொறுப்புகளுக்கான மீட்டிங் ஒன்று பெங்களூரில் ஏற்பாடாகி இருந்தது. கம்பெனி மாத வருட செலவுகளை கணக்கிட்டு லாப விகிதங்களை முடிவு செய்ய டைரக்டர்கள் கூடி அந்தக் கூட்டத்தில் விவாதிப்பார்கள்.

வழக்கம் போல் பாஸ்கர்தான் அதுபோன்ற மீட்டிங்குகளில் கலந்து கொள்வான். இம்முறை விஷயமாய் பிளான் செய்தவன் தனக்குப் பதில் தன் சார்பில் வசந்தனையும் திலகாவையும் அனுப்ப முடிவு செய்தான்.

அதற்கு முன் திலகாவை அழைத்து தனியே பேசவும் செய்தான். ''திலகா, உன்னிடம் ஒரு முக்கிய விசயம் பேச வேண்டும்..'' என்று பேச்சைத் தொடங்கினான் பாஸ்கர்.

''முக்கிய விசயமா? என்ன சார்?'' வாய் பிளந்தாள் திலகா.

''முக்கியமான விசயம்தான்... ஆனால் நீ தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது...'' பீடிகை போட்டவனாய் அவளையே உற்றுப் பார்த்தான் பாஸ்கர்.

திலகாவோ தன் அத்தனை பற்களையும் காட்டி அசிங்கமாய் சிரித்தாள். ''ஐயோ! என்னிடம் என்ன தயக்கம் சார்! நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்! நான் ஒருபோதும் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டேன்.''

பாஸ்கர் துணிச்சல் கொண்டவனாய் விசயத்தைச் சொன்னான்.

''திலகா, நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்..''

''என்ன காரியம் சார்?''



''அதற்கு முன் ஒரு கேள்வி..''

''கேளுங்கள்..''

''வசந்தனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

வசந்தனின் பெயரைச் சொன்னதும் ஸ்விட்ச் போட்டாற் போல் திலகாவின் முகத்தில் ஒரு பிரகாசம் படருவதை பாஸ்கர் உன்னிப்பாய் கவனித்தான்.

''வசந்தனைப் பற்றியா கேட்கிறீர்கள்? அவர் நல்லவர். திறமைசாலி. நன்கு வேலை பார்க்கக் கூடியவர்..''

''அப்புறம்?''

கேள்வியை வீசியவாறு பாஸ்கர் கூர்ந்து நோக்கினான். திலகா நெளிந்தபடி அவனையே பார்த்தாள்.

''அப்புறம் என்ன சார் இருக்கிறது? அவ்வளவுதான்!''

''அவ்வளவுதானா?''

''ஆமாம். அவ்வளவுதான் சார்!''

''நன்றாக யோசி திலகா. வசந்தன் பற்றி வேறு எந்த நினைப்பும் உனக்கு இல்லை? உன் மனதை, உன் இதயத்தைத் தொட்டுச் சொல்..''

பாஸ்கர் இப்படிக் கேட்டதும் திலகா ஒரு கணம் சிலிர்த்துத் தான் போனாள். முகம் எல்லாம் சிவக்க நாணிக் கோணியவளாய் ரொம்பவும் வெட்கப்பட்டாள்.

அவளை மேலும் சங்கடப்படுத்த விரும்பாதவன் போல் பாஸ்கர் அடுத்த கேள்வியை வீசினான்.

''எனக்கு எல்லாம் தெரியும் திலகா! உள்ளுக்குள் நீ வசந்தனை விரும்புகிறாய். மனதார அவனைக் காதலிக் கிறாய்?''

"சார்.. அது... வந்து.."

"எல்லாம் எனக்குத் தெரியும். இதில் மறைப்பதற்கு என்ன இருக்கிறது? உனக்கு உன்னுடைய அழகிற்கு ஏற்ற சரியான ஜோடி வசந்தன்தான்!"

பாஸ்கர் குறி பார்த்து அடித்தான். திலகா கிறங்கித்தான் போனாள்.

"நிஜமா... நிஜமாவா சார்?"

"நிஜம்தான்! அப்போ.. நான் சொல்வது உண்மைதானே? வசந்தனை நீ விரும்புவது நிஜம்தானே?"

திலகா கோயில் மாடு மாதிரி பூம்பூம்மென தலையாட்டினாள். ஆசையில் அவளது கண்கள் விரிந்து விழிகள் ஜொலித்தன.

"சார்.. எனக்கு வசந்தனை பிடித்திருக்கிறது. நான் அவரை விரும்புகிறேன். ஆனால் அவர் என்னை விரும்புகிறாரா என்றுதான் தெரியவில்லை.."

திலகா பேச்சை முடிப்பதற்குள் பாஸ்கர் குறுக்கிட்டான். "அந்தக் கவலையை விடு திலகா.. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். அதற்காக நான் ஒரு வழியும் வைத்து இருக்கிறேன்.."

"என்ன வழி வைத்திருக்கிறீர்களா?"

"ஆமாம் திலகா. நான் ஒரு அருமையான வழி வைத்திருக்கிறேன். அதன்படி நடந்தால் வசந்தன் கண்டிப்பாய் உனக்குக் கிடைப்பார். நீ நான் சொன்னபடி செய்கிறாயா?"

"செய்கிறேன் சார்!" திலகா தன் அத்தனை பற்களையும் காட்டி உறுதி செய்தாள்.



பாஸ்கர் தனது பெங்களூர் திட்டத்தை கவனமாய் அவளுக்கு விவரித்தான்.

## 12



அன்று புதன் கிழமை. அன்றுதான் திலகாவும் வசந்தனும் பெங்களூர் சென்று மறுநாள் நடக்க இருக்கும் மீட்டிங்கில் கலந்து கொள்ள வேண்டும்.

மதுராவிடம் பிரியா விடை பெற்று ரெயில் ஏறினான் வசந்தன். அவனுக்கு ஒரு நாள் மதுராவை விட்டுப் பிரிந்திருப்பதே என்னவோ போல் இருந்தது. மதுராவுக்கும் அதே நிலைமைதான். கண்கள் கலங்க ரயில் புறப்படும் வரை அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

திலகா புது பளபளப்புடன் ஷிபான் சேலை ஒன்றில் சீவிச் சிங்காரித்து மணப்பெண் போலவே வந்திருந்தாள். ஒருநாள் முழுவதும் தான் வசந்தனுடனே இருக்கப் போகிறோம்... அவனுடனே பொழுதைக் கழிக்கப் போகிறோம் என்ற நினைப்பே அவள் மனதுக்கும் சந்தோஷத்தை பொங்கச் செய்திருந்தது.

முகம் முழுவதும் புன்னகை பொங்க சந்தோஷத்தில் வெடித்து விடுவது போல்தான் திலகா நடமாடிக் கொண்டிருந்தாள். அவர்களை ரெயில் நிலையத்தில் வழியனுப்ப பாஸ்கரும் வந்திருந்தான்.

மதுரா வசந்தனை வழியனுப்பியபடி கண்கலங்க நிற்பதைப் பார்த்ததும் ஒரு கணம் திடுக்கிடத்தான் செய்தான். மறுகணமே சமாளித்தும் கொண்டான். வசந்தன் பெங்களூர் போய்விட்டு வரட்டும். பிறகுதான் எல்லாம் தலைகீழாய் மாறிவிடுமே!

இப்போது இப்படி கண் கலங்குகிற மதுரா வசந்தனை வெறுத்தாலும் வெறுத்து விடுவாளே!

மனம் நிறைய ஆறுதல்பட்டவனாய் முகத்தில் வலுக்கட்டாயமாய் புன்னகையை வரவழைத்துக் கொண்டான். ''ஞாபகமிருக்கிறதா! நான் சொன்னபடி நடக்க வேண்டும். நீ நடிக்க வேண்டும். புரிகிறதா திலகா!'' என உறுதிப்படுத்திக் கொண்டான்.

திலகா பதிலுக்கு உற்சாகமாய் தலையாட்டியவள், ''கவலையே படாதீர்கள் சார்! நீங்கள் சொன்னபடி கச்சிதமாய் நடந்து கொள்கிறேன்!'' என உறுதியும் கொடுத்தாள்.

பாஸ்கர் மன திருப்தி கொண்டவனாய் அவர்களுக்கு விடை கொடுத்தான். தனது திட்டம் வெகு விரைவில் நடக்கப் போகும் மகிழ்ச்சியில் விசிலடித்தபடி துள்ளாத குறையுடன் அங்கிருந்து அகன்றான்.

மதுராவோ வசந்தனுக்கு கண்கலங்க கையசைத்தாள். மனம் கணக்க வீடு நோக்கி நடந்தாள். வசந்தனுடன் வேண்டுமென்றே சீவிச் சிங்காரித்துச் செல்லும் திலகாவை நினைத்த போது அவளுக்கு எரிச்சலாய்த்தான் வந்தது. 'இந்த திலகா விசயத்தில் கொஞ்சம் எச்சரிக்கையாய்த்தான் இருக்க வேண்டும். பெரிய சாகசக்காரி' என அவளைப் பற்றியும் நினைத்துக் கொண்டான்.

## 13



ஒரு வழியாய் வசந்தனும் திலகாவும் பெங்களூர் வந்தாயிற்று. அவர்களுக்காக ஒட்டலில் அறை புக் செய்யப்பட்டிருந்தது. அந்தப் பெரிய ஸ்டார் ஒட்டலின் ரிசப்ஷனுக்கு வந்து விசாரித்த வசந்தன் திடுக்கிட்டான்.



இருவருக்கும் தனித்தனி அறை ஒதுக்கப்படாமல் இரண்டு படுக்கை கொண்ட ஒரே ஒரு அறை மட்டுமே ரிசர்வ் செய்யப்பட்டிருந்தது. அப்படியானால் வசந்தனும், திலகாவும் ஒரே அறையில் தங்க வேண்டிய நிர்ப்பந்தம்.

வசந்தன் திகைக்க திலகா கலகலவென சிரித்தாள். ''இதில் என்ன இருக்கிறது வசந்தன்? நாம் என்ன முன்பின் தெரியாதவர்களா? ஒரே அறையில் தங்குவோம்!'' என்று வசந்தனின் சூட்கேசையும் எடுத்துக் கொண்டு அறையை நோக்கி நடந்தாள்.

அந்த அழகான குளிரூட்டப்பட்ட அறையில் திலகாவுடன் தங்க வசந்தனுக்குத்தான் சங்கடமாய் இருந்தது. திலகாவோ எவ்வித சங்கோஜமும் இல்லாமல் வேண்டுமென்றே அவன் முன்னால் உடைகளை மாற்றினாள். சேலையைக் களைந்து விட்டு சிக்கென்று நைட்டிக்கு மாறிக் கொண்டாள்.

வசந்தனைப் பார்த்து, ''வசந்தன் மணி ஆறுதான் ஆகிறது. மீட்டிங் பத்து மணிக்குத்தான். அதுவரை ஒரு குட்டித் தூக்கம் போடுவோம் வருகிறீர்களா?'' என்றபடி திலகா மெத்தையில் படுத்துக் கொண்டாள்.

வசந்தன் அவளுக்கு மறுப்புச் சொல்லிவிட்டு பேப்பரை எடுத்து வைத்துக் கொண்டான். அவன் மனம் மதுரா நினைப்பில் சிறகடித்தது.

இந்த இடத்தில் இந்த அறையில் திலகாவிற்கு பதில் மதுரா வந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என நினைத்துப் பார்த்தான். பொழுது எவ்வளவு இனிமையாய் கழிந்திருக்கும் என்பது அவன் முகத்தில் ஏக்கமாய் வெளிப்பட்டது.

திலகாவோ தூங்காமல் கண்களை அகல விரித்து வசந்தனையே விழுங்குவது போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இங்கு பெங்களூரில் எப்படியாவது வசந்தனை மயக்கிட வேண்டும். தன் வசப்படுத்திவிட வேண்டும்.. என மனக் கணக்கிட்டுக் கொண்டிருந்தாள்.

ஒருவழியாய் அன்று ஆடிட்டிங் மீட்டிங்கும் நடந்து முடிந்தது. வசந்தனும் திலகாவும் மீட்டிங்கில் கலந்து விட்டு அறைக்குத் திரும்பி இருந்தார்கள். திலகா வழக்கம் போல் வசந்தன் முன்பே உடைகளை மாற்றியவள் சிறிய கவுன் ஒன்றை போட்டுக் கொண்டாள்.

பார்த்து வசந்தன் திகைத்து விட்டான். "என்ன திலகா இது? டிரஸ் ரொம்பவும் சிறிதாய் இருக்கிறது?" என்று கேட்டே விட்டான்.

திலகா சிரித்தாள்.

"ஐயோ வசந்தன்... தெரியாதா? இதுதான் லேட்டஸ் பேஷன்!"

"ரொம்பவும் ஆபாசமாகத் தெரிகிறது.."

"ஆபாசமாகவா?"

மறுபடி வாய் பிளந்த திலகா வசந்தன் பக்கத்திலே வந்து விட்டாள்.

"என்னை நன்றாகப் பாருங்கள் வசந்தன்? நான் ஆபாசமாகவா தெரிகிறேன்.."

வசந்தன் முன் வந்து நெஞ்சு நிமிர்த்தி தன் முழு அழகையும் காட்டியவாறு கேட்க வசந்தன் அதிர்ந்துதான் போனான்.

ஒரு கணம் அவனுக்கு ஒன்றும் ஓடவில்லை. ஒரு பெண் இப்படி தன் உடம்பை ஒரு ஆண் முன் வெட்கமில்லாமல் காட்டுவாள் என அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.



"திலகா என்ன இது?"

வசந்தன் வெகுண்டு சீற திலகா வெட்கமில்லாமல் சிரித்தாள்.

"வசந்தன், என்னைப் பாருங்கள். நான் அழகாய் இருக்கிறேனா... இல்லையா? அதைச் சொல்லுங்கள்!" என்றபடி மேலும் அவனுக்கு நெருக்கமாய் வந்தாள் திலகா.

வசந்தன் இதை எதிர்பார்க்கவில்லை. ஆடிப் போனான்.

"திலகா... என்ன இது! முதலில் சற்றுத் தள்ளி நில்!"

வசந்தன் குரலை உயர்த்தியும் திலகா கொஞ்சமும் சட்டை செய்யாமல் அவனை நெருங்கினாள்.

நெருங்கியவள் வசந்தன் சற்றும் எதிர்பாராமல் சட்டென அவனை தழுவியும் கொண்டாள். மின்னல் வேகத்தில் நடந்து விட்ட விசயத்தைக் கண்டு வசந்தன் ஒரு கணம் செய்வதறியாமல் திகைக்க...

திலகா அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அப்படியே அவனது உதடுகளை கவ்வி மேல் நாட்டு பாணியில் முத்தமிட்டாள்.

சட்டென நடந்து விட்ட இந்த நிகழ்ச்சியை, திலகா தயாராய் செட் செய்து வைத்திருந்த - பாஸ்கர் கொடுத்த அந்த வெளிநாட்டுக் காமிரா க்ளிக் செய்தும் கொண்டது.

## 14



வசந்தன் திலகாவை பிடித்து ஓங்கித் தள்ளிவிட்டான். "ச்சீ! உனக்கு வெட்கமா இல்லை.. பெண்ணா நீ!" வெடிக்கவும் செய்தான்.

ஆனால் திலகா ஒன்றும் வெட்கப்படவோ, அவமானம் கொள்ளவோவில்லை. தான் நினைத்த ஒரு காரியத்தை சாதித்து விட்ட பெருமிதத்தில் வசந்தனைப் பார்த்து அசட்டுச் சிரிப்பு சிரித்தாள். கூடவே தனது கடைக் கண்ணால் படம் பிடித்த காமிராவையும் பார்த்துக் கொண்டாள்.

வசந்தன் சட்டென திலகா கொடுத்த முத்த அதிர்ச்சியில் பளீரென அடித்த காமிரா பிளாஷைக் கவனிக்கத் தவறி விட்டான். அவனுக்கு திலகா முத்தம் கொடுக்கும் போது ரகசியமாய் எடுத்த போட்டோ விஷயம் தெரியாமலே போயிற்று.

ஒருவழியாய் மீட்டிங் முடிந்து பெங்களூரிலிருந்து திலகாவும், வசந்தனும் சென்னைக்கு வந்தார்கள். சென்னையில் கால் வைத்ததுமே உடனடியாய் பாஸ்கருக்குப் போன் செய்து 'திட்டமிட்டபடி எல்லாம் நடந்து விட்டது. போட்டோவும் எடுத்தாயிற்று' என முழுவதையும் திலகா தெரிவித்தாள்.

முதல் நாள் அலுவலகத்தில் ஒன்றும் நடக்கவில்லை. மறுநாள்தான் புயல் பூகம்பம் வெடித்தது. அன்று அலுவலகத்திற்கு அந்த போட்டோவை - திலகாவும் வசந்தனும் கட்டிப் பிடித்தபடி முத்தமிடும் போட்டோவை - திலகா கொண்டு வந்திருந்தாள்.

போட்டோவை பல பிரதிகள் எடுத்து எல்லோருக்கும் நோட்டீஸ் போல் விநியோகித்தாள். ஸ்டைலாய் மதுராவின் மேஜை மீது தூக்கிப் போட்டு சிரித்தபடி மதுராவைப் பார்த்தாள்.

மதுரா சாதாரணமாய்த்தான் அந்த போட்டோவை எடுத்தாள். போட்டோவைப் பார்த்ததும் அவளது முகம் வெளிறிற்று.

''திலகா என்ன இது?''

திலகா சிரித்தாள்.



''பார்த்தால் தெரியவில்லை? நானும் வசந்தனும் பெங்களூரில் எடுத்துக் கொண்ட புகைப்படம்!''

''என்ன இது அசிங்கம்..?''

''அசிங்கமா..? காதலர்கள் ஒருவருக்கொருவர் இறுகத் தழுவி முத்தமிடுவது அசிங்கமா? யார் சொல்லியிருக்கிறார்கள்?''

''என்ன, காதலரா? வசந்தனா உன் காதலன்?''

திலகா மறுபடியும் வெடிப்பது போல் சிரித்தாள்.

''இன்னுமா புரியவில்லை! போட்டோவைப் பார்த்துமா உனக்குப் புரியவில்லை! நல்ல மூளைதான் உனக்கு!''

திலகா கிண்டல் செய்தாள்.

மதுராவுக்கு ஆத்திரம். அவமானம். வசந்தனா.. இப்படி திலகாவுடன் இறுக்கமான அணைப்பில்... முத்தமிட்டுக் கொண்டு..? மூச்சுவாங்க யோசித்தாள்.

ஒரு கணம் அவளுக்கு ஒன்றும் ஓடவில்லை. அவளால் மேற்கொண்டு சிந்திக்கவோ வசந்தனை அப்படி நினைத்துப் பார்க்கவோ கூட முடியவில்லை.

ஆனால் கையிலிருந்த போட்டோ அவளை விரட்டியது. நெருப்பாய் சுட்டது. உண்மை அதுதானே? தனக்குச் சொந்தமான வசந்தன் இன்னொரு பெண்ணை அணைத்து... இறுக்கமாய் முத்தமிட்டுக் கொண்டு...

என்ன ஒரு அநியாயம் இது? கொதித்துப் போனவளாய் மதுராவை ரசித்துக் கைகொட்டி சிரிப்பது போல் பார்த்துக் கொண்டிருந்தாள் மதுரா.

அந்நேரம் பார்த்துதான் வசந்தன் ஒன்றும் அறியா அப்பாவியாய் அலுவலகத்தினுள் நுழைந்தான். நுழைந்தவன் முன் போட்டோவை வீசி எரிமலையாய் குமுறினாள் மதுரா. ''சே! கடைசியில் நீங்களும் ஒரு சராசரி ஆண் போல் சபலப்பட்டு எனக்கு மோசம் செய்து விட்டீர்களே!'' துடித்துப் போனவளாய் வெடித்தாள் மதுரா.

## 15



வசந்தன் இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. போட்டோவை வாங்கிப் பார்த்தவன் அதிர்ந்தே போய் விட்டான்.

அவனும் திலகாவும் நெருக்கமாய் ஒருவரையொருவர் தழுவி முத்தமிட்டுக் கொண்டு...

ஆத்திரத்துடன் முகம் சிவக்க நிமிர்ந்து திலகாவைப் பார்த்தான்.

அவள் வெற்றி கொண்ட கெக்கலிப்பு பார்வையுடன் அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தாள்.

வசந்தனுக்கு அந்த ஒரு நிமிடத்தில் திலகாவின் அந்த வஞ்சக சிரிப்பில், எல்லாம் புரிந்து விட்டது. சரிதான்! திலகா திட்டம் போட்டு நடந்திருக்கிறாள். வேண்டுமென்றே பிளான் செய்து நெருக்கமாய் நடந்து, ரகசியமாய் காமிரா வைத்து நமக்கே தெரியாமல் போட்டோ பிடித்து விட்டாள்.

''மதுரா.. இதை நம்பாதே! இது சரியான சூழ்ச்சி! திலகா ஏதோ சதி செய்கிறாள்..'' வசந்தன் அலறினான்.

மதுரா வெடுக்கென திரும்பினாள்.



''திலகா சதி இருக்கட்டும்... முதலில் இந்த போட்டோவிற்கு பதில் சொல்லுங்கள். இந்த போட்டோவில் இருப்பது நீங்கள்தானே?''

''அது.. அது.. மதுரா?''

வசந்தன் பதில் சொல்ல முடியாமல் திணறினான்.

''போதும் உங்கள் நடிப்பு! இனியும் வேஷம் போடாதீர்கள்! கடைசியில் எல்லா ஆண்களும் போலத்தான் நீங்களும்..''

''மதுரா நான் சொல்வதைக் கேள். நீ நினைப்பது போல் தவறாக எதுவும் நடக்கவில்லை..''

''தவறு நடக்கவில்லையா? அப்படியானால் இந்த போட்டோ என்ன சொல்கிறது? இதற்கு என்ன அர்த்தம்?''

மதுரா வெகுண்டு போய் கேட்டாள்.

வசந்தனால் பதில் சொல்ல முடியவில்லை. தலைகுனிந்தான்.

மதுராவின் ஆத்திரம் அடங்கவில்லை. அந்த போட்டோவை சுக்கு நூறாய் கிழித்தாள். அப்படியே வசந்தனின் முகத்தில் வீசினாள்.

''நான் உங்களை வெறுக்கிறேன். என் முகத்தில் விழிக்காதீர்கள்..''

காறி உமிழாத குறையாய் பேசிவிட்டு விறுவிறுவென மதுரா அங்கிருந்து அகன்றாள்.

வசந்தன் துடித்துப் போனான்.

மதுரா பேசிய ஒவ்வொரு வார்த்தையும் தீயாய் சுட்டது. சம்மட்டியாய் அடித்தது. இடிந்து போனான்.

மதுரா ஒருபோதும் அவனிடம் கோபப்பட்டதில்லை. ஏன், அதிர்ந்து கூட பேசியதில்லை. அப்படிப்பட்ட மதுரா இன்று.. எரித்து விடுவது போல் என்னவெல்லாம் பேசிவிட்டாள்.

''நான் உங்களை வெறுக்கிறேன். என் முகத்தில் இனி விழிக்காதீர்கள்!''

மதுராவா இப்படிச் சொன்னாள்? ஒரு நாள் உங்கள் முகத்தைப் பார்க்காவிட்டால்... எனக்குத் தூக்கமே வராது என பதறும் மதுராவா இப்படிப் பேசிவிட்டாள்?

இங்கு என்னதான் நடக்கிறது?

திகைத்துப் போய் வசந்தன் நின்றான்.

திலகா எல்லாவற்றையும் கண்குளிர பார்த்துக் கொண்டிருந்தவள் தளுக்கு மினுக்கு நடை நடந்து வசந்தன் முன் வந்தாள்.

''மதுரா... கிடக்கிறாள்! நீங்கள் ஒன்றும் கவலைப் படாதீர்கள்..!''

வசந்தன் திடுக்கென நிமிர்ந்து அவளை முறைத்தான்.

திலகா அலட்சியமாய் சிரித்தாள்.

''முறைக்காதீர்கள்! இனி நான்தான் உங்கள் காதலி! என்னைத்தான் நீங்கள் காதலித்தாக வேண்டும்..!''

அழுத்தந்திருத்தமாய் சொன்னாள் திலகா!



## 16



''நான்தான் உங்கள் காதலி. என்னைத் தான் நீங்கள் காதலிக்க வேண்டும்!'' திலகா உரக்கச் சொல்லிவிட்டு சென்று விட்டாள்.

வசந்தனுக்கு எல்லாம் புரிந்தது. தனக்கும் மதுராவுக்கும் உள்ள காதலை உடைக்க தன்னை அபகரிக்க திலகா நடத்திய முத்த நாடகம் இது. இதைக் கொஞ்சங் கூட மதுரா புரிந்து கொள்ளாமல் அப்படியே நம்பி விட்டாளே!

எவ்வளவு நாள் பழக்கம்? என்னைப் பற்றி எவ்வளவு அறிந்திருப்பாள்? அப்படிப்பட்டவள் என் மீது நம்பிக்கை இல்லாமல் சந்தேகம் கொண்டு விட்டாளே!

மனம் பதைத்தவனாய் வசந்தன் தன் இருக்கையில் போய் சோர்வாய் உட்கார்ந்து கொண்டான். திலகாவை எதிர் இருக்கையில் காணவில்லை. எங்குபோய் விட்டாள் என்று தேடியபோது எம்.டி. பாஸ்கர் அறைக்குச் சென்று இருப்பது தெரிந்தது.

சதிகாரி! நேராய் பாஸ்கரிடமே போய் விஷயத்தைச் சொல்லப் போய் விட்டது போல் தெரிகிறதே! முதலாளி பாஸ்கர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்?

வசந்தன் செய்வதறியாமல் தவித்துப் போய் நிற்க... நிஜமும் அப்படித்தான் இருந்தது. திலகா பாஸ்கர் அறையில் எல்லா விஷயங்களையும் சுவாரஸ்யமாய் பாஸ்கரிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அந்த போட்டோவைப் பார்த்ததும், மதுரா வசந்தனைப் பார்த்து வெடித்தது. ''நம் காதல் முறிந்து விட்டது. இனி என் முகத்தில் முழிக்காதீர்கள்'' என்று ஆவேசப்பட்டது வரை.. எல்லாவற்றையும் திலகா சொல்லி முடித்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த பாஸ்கர் துள்ளிக் குதிக்காத குறையாய் முகம் முழுவதும் சந்தோஷத்தில் ஜொலிக்க பரவசமாகிக் கொண்டிருந்தான்.

''வெல்டன் திலகா. எல்லாம் நாம் நினைத்தபடியே கச்சிதமாய் நடந்து விட்டது. உனக்கு இப்போதுதான் நிம்மதி. மதுரா வசந்தன் காதல் முறிந்து விட்டது. இனி வசந்தன் உனக்குத்தான். தாராளமாய் நீ அவரை காதலிக்கலாம். கல்யாணம் செய்து கொள்ளலாம், புரிந்ததா?''

பாஸ்கர் கண் சிமிட்டியபடி பேசினான். அவன் பேசப் பேச மதி மயங்கியவளாய் அப்படியே வசந்தனுடன் கனவுகளில் அப்போதே சஞ்சரிக்கத் தொடங்கினாள் திலகா.

பாஸ்கர்தான் அவளை சுயநினைவுக்குக் கொண்டு வந்து வெளியனுப்பி வைத்தான். அவன் மனம் மின்னலாய் வேலை செய்ய ஆரம்பித்தது. நினைத்தபடியே காயை நகர்த்தி திலகாவை வைத்து மதுரா - வசந்தன் காதலை உடைத்தா யிற்று.

இனி மதுரா தனி ஆள். தனி மரம்தான். யார் வேண்டு மானாலும் காதல் கூடு கட்டலாம். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எப்படியாவது மதுராவைக் கவர்ந்துவிட வேண்டும். மதுராவின் மனதில் இடம் பிடித்துவிட வேண்டும்.

பாஸ்கர் யோசித்தவன் உடனே பணியாளிடம் மதுராவை அழைத்து வரும்படி சொன்னான்.

மதுரா சோர்ந்து போன முகத்துடன் பாஸ்கரின் அறைக்குள் நுழைந்தாள். பாஸ்கர் கவனமாய் வார்த்தைகளைத் தேடிப் பேசினான்.



''எல்லாம் நான் கேள்விப்பட்டேன் மதுரா. எனக்கும் வருத்தமாய் இருக்கிறது. வசந்தன் இப்படி நடந்து கொள்வார் என நான் கொஞ்சமும் நினைக்கவில்லை.''

''.....''

''அதில் முக்கியமான விஷயம் என்னவென்றால்... அது ஆண்களுடைய பலவீனம்! அழகாய் ஒரு பெண் முன் நிற்கும்போது, தனியே அவளுடன் இருக்கும் சந்தர்ப்பம் வாய்க்கும்போது கட்டுப்பாட்டை இழந்து விடுகின்றனர். வசந்தனும் அப்படித்தான் தன் கட்டுப்பாட்டை இழந்து விட்டார். வரம்பை மீறிவிட்டார். நடக்கக் கூடாத தப்பு நடந்து விட்டது..''

மதுரா திடுக்கிட்டு நிமிர்ந்து விட்டாள்.

''என்ன சொல்கிறீர்கள்? நடக்கக் கூடாத தப்பா?''

பாஸ்கர் முகத்தை மேலும் சோகமாக வைத்துக் கொண்டான். ''ஐயோ..! உங்களுக்கு விசயம் முழுவதும் தெரியாதா மதுரா? திலகா எல்லாவற்றையும் வெளிப்படையாக என்னிடம் சொல்லிவிட்டாள். தனிமையில், அந்த சந்தர்ப்பத்தில் இருவரும் ஒருவரையொருவர் மறந்து வரம்பு மீறிவிட்டார் களாம். தப்பு நடந்து விட்டதாம்?''

பாஸ்கர் ஏற்றி இறக்கி நிஜம் போலவே சொல்லி முடித்தான். மதுராவால் நம்பாமலும் இருக்க முடியவில்லை. வேறு ஒரு பெண்ணை இறுக அணைத்து முத்தம் கொடுக்கும் அளவுக்கு வசந்தன் போய்விட்டார். இனி அந்தத் 'தப்பை' மட்டும் அவர் பண்ணியிருக்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்?

வசந்தனை எப்படி நம்புவது?

அவர்தான் தனது நம்பிக்கையை முழுவதும் குலைத்து விட்டாரே! புனிதமான காதலுக்கு துரோகம் செய்துவிட்டாரே!

மதுரா உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருக்க.. பாஸ்கர் அடுத்த கணையை குறிபார்த்து வீசினான்.

''தப்பு நடந்து விட்டது. இனி அவர்களை ஒன்று சேர்த்து வைப்பதுதான் நமது கடமை. அவர்கள் இருவருக்கும் கல்யாணம் செய்து வைத்து விடுவது நல்லது என நினைக்கிறேன். உங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லையே..''

''ஆட்சேபணை இல்லை. திலகாவிற்கும் வசந்தனுக்கும் கல்யாணம் நடக்கட்டும். அதுதான் சரி'' பாஸ்கரின் கேள்விக்கு உறுதியாகச் சொன்னாள் மதுரா.

## 17



**வ**சந்தனால் நடப்பது ஒன்றையும் நம்ப முடியவில்லை... காரியங்கள் மளமளவென நடந்தன. மதுரா அவனை ஒரேயடியாய் வெறுத்து ஒதுக்கி விட்டாள். திலகாவோ அலுவலகம் முழுவதும் பெங்களூரில் தனக்கும் வசந்தனுக்கும் தப்பு நடந்து விட்டது போல் பறைசாற்றிக் கொண்டிருந்தாள்.

இது போதாதென்று பாஸ்கர் வேறு கூப்பிட்டு, ''வசந்தன் நடந்தது நடந்து விட்டது. ஏதோ சபலத்தில் அப்படி நடந்து விட்டீர்கள். இனி வேறு வழியில்லை. பேசாமல் திலகாவை திருமணம் செய்து கொள்ளுங்கள்'' என்றான்.

''சார்.. என்ன சொல்கிறீர்கள்? எனக்கும் திலகாவிற்கும் பெங்களூரில் எந்தத் தப்பும் நடக்கவில்லை...''

பாஸ்கர் சிரித்தான்.

''வசந்தன், தப்பு நடந்ததோ இல்லையோ.. வேறு விசயம். உங்களுக்கும் திலகாவிற்கும் தொடர்பு இருக்கிறது என்று



அலுவலகம் மொத்தமும் நம்புகிறது. எனக்கு அலுவலக கவுரவம் ரொம்பவும் முக்கியம். அதனால்..''

''அதனால்..?''

வசந்தன் திடுக்கிட்டுப் பார்க்க பாஸ்கர் நிதானமாய் வார்த்தைகளை வீசினான்.

''நீங்கள் திலகாவை திருமணம் செய்து கொள்ள வேண்டும். இந்த அலுவலகத்தின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும். இல்லாவிட்டால் உங்களை வேலையில் இருந்து டிஸ்மிஸ் செய்வதைத் தவிர எனக்கு வேறு வழியேயில்லை.''

வசந்தன் அதிர்ந்து போய்விட்டான்.

வேலை கிடைப்பது குதிரைக் கொம்பான இந்தக் காலத்தில் இந்த வேலையும் போய்விட்டால்...? இதையும் திலகாவிற்காக விட்டு விட்டால்...?

தன்னுடைய நிலையை, குடும்ப நிலையை நினைத்துப் பார்க்கவே அவனுக்குப் பயமாயிருந்தது.

பாஸ்கர் அடுத்த அஸ்திரத்தை கவனமாய் வீசினான்.

''வசந்தன், நீங்கள் இந்த வேலையை விட்டுவிட்டு வேறு வேலை தேடிப் போகலாம் என்று கூட நினைக்கலாம். ஆனால் திலகா உங்களை சும்மா விடப் போவதில்லை. உங்கள் மீது போலீசில் கம்ப்ளையிண்ட் கொடுக்கவும் தயாராகி விட்டாள்..''

''என்ன.. போலீஸ் கம்ப்ளையிண்ட்டா..?''

''ஆமா... நீங்க அவளைக் கெடுத்துட்டதாகவும், அதனால் உடனடியாய் கல்யாணம் செய்து கொள்ளும்படியும் கம்ப்ளையிண்ட். அப்படி ஒரு கம்ப்ளையிண்ட் திலகா போலிசிடம் கொடுத்தால் உங்கள் நிலைமை என்ன ஆகும் என யோசித்துப் பாருங்கள்..''

"சார்.."

"அதனால்தான் சொல்கிறேன் வசந்தன். வேறு வழியில்லை. பேசாமல் திலகாவை கல்யாணம் செய்து கொள்ளுங்கள்.."

வசந்தன் யோசித்தான்.

கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் இருந்தது. ஒரு வழியும் புலப்படவில்லை. எல்லா வழியும் அல்லவா அடைத்து இருக்கிறது.

மதுரா வேறு முகத்தை திருப்பிக் கொண்டாள். யோசித்துப் பார்க்காமல்,உண்மையை புரிந்து கொள்ளாமல், அவனை ஒரேயடியாய் வெறுக்க ஆரம்பித்து விட்டாள்.

இனி என்ன செய்வது..?

மதுரா நம்மை இனி நம்பவா போகிறாள்?

வசந்தன் விடை காண முடியாமல் குழம்பினான்.

மேலும் இரண்டு நாட்கள் ஓடிற்று.

வசந்தன் தவித்தான்.

பாஸ்கர் அவனை சம்மதிக்கும்படி நெறுக்கினான்.

இறுதியில்... வேறு வழியில்லை!

மனம் கணக்க திலகாவை கல்யாணம் செய்து கொள்ள வசந்தன் சம்மதித்தான்.

## 18



மலையடிவார முருகன் கோவில்.

அங்குதான் திலகாவிற்கும் வசந்தனுக்கும் கல்யாணம்.

அதுவும் பாஸ்கர் முன்னிலையில்.



இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காண மதுராவும் வந்திருந்தாள். சோர்ந்த முகத்துடன் அழுத கண்களுடன் அவளைப் பார்க்கவே பரிதாபமாய் இருந்தது.

பட்டு வேட்டி, பட்டுச் சட்டை மாப்பிள்ளை தோரணையில் இருந்த வசந்த் நடப்பதை நம்ப முடியாமல், கல்யாண சடங்குகளில் நாட்டமில்லாமல் மதுராவையே ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான்.

எங்கே, மதுரா திருமணத்தை தடுத்து விட மாட்டாளா? உண்மையைப் புரிந்து கொள்ள மாட்டாளா? என்ற ஏக்கம் அவனது கண்களில் தொனித்தது.

பாஸ்கர்தான் குதூகலம் கொப்பளிக்க நின்று கொண்டி ருந்தான். சந்தோஷத்தில் அவன் முகமே வெடித்து விடுவது போலிருந்தது.

நேரம் விரைய ஆரம்பித்தது.

வழக்கமான திருமணச் சடங்குகள் ஒவ்வொன்றும் நடந் தேறியது.

புரோகிதர் மந்திரங்களை வேகமாய் ஓதிக் கொண்டிருந்தார்.

இதோ முகூர்த்த வேளை...

மனம் கணக்க... கண் கலங்க... வசந்தன் தாலியை கையில் எடுத்தான்.

இனி, திலகாவின் கழுத்தில் கட்ட வேண்டியதுதான் பாக்கி!

அப்போது...

அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது.

மணப்பெண்ணாய் அதுவரை வசந்தன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த திலகா விருட்டென எழுந்தாள்.

எல்லோரும் திகைத்துப் போய் நிற்க-

எல்லோரையும் அமைதியாய்ப் பார்த்தாள் திலகா.

''என்னை எல்லோரும் மன்னித்து விடுங்கள். நான் சொன்னது பொய். வசந்தன் ரொம்பவும் நல்லவர். பெங்களூரில் எந்த தப்பும் எங்களுக்குள் நடக்கவில்லை. வசந்தன் நிஜமாய் விரும்புவது, காதலிப்பது மதுராவைத்தான்! மதுராதான் அவருக்கு ஏற்ற மனைவி. இங்கு மணப் பெண்ணாய் உட்கார வேண்டியதும் மதுராதான்!''

திலகா சொல்லியதோடு நிற்காமல் நடந்து திகைத்துப் போயிருந்த மதுராவை தரதரவென இழுத்து மணமேடையில் கொண்டு போய் திலகா உட்கார வைத்தாள்.

''என்னை மன்னித்து விடுங்கள் இருவரும்! உங்களை நான்தான் பிரிக்கப் பார்த்தேன். ஆனாலும் என் மனம் கேட்கவில்லை. உண்மைக் காதல் என் மனதை உறுத்திற்று. பொய் சொல்லி ஏமாற்றி கல்யாணம் செய்தால் சந்தோஷமாத்தான் வாழ முடியுமா? அப்படி ஏமாற்றி வாழ்வது ஒரு வாழ்க்கையா? இதையெல்லாம் யோசித்துப் பார்த்த நான் மனம் திருந்தி விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்...''

பாவ மன்னிப்புக் கேட்காத குறையாய் மனம் திருந்தி கண்கலங்கினாள் திலகா.

மதுராவும் கண் கலங்கினாள்.

''என்னையும் மன்னித்து விடுங்கள் வசந்தன். உங்களை ரொம்பவும் சோதித்து விட்டேன். உங்கள் மனதை ரொம்பவும் நோகடித்து விட்டேன்..''

விசும்பியவனின் மலர்க் கரங்களை அழுந்தப் பிடித்து வசந்தன் ஆறுதல்படுத்தினான். மன்னித்து விட்டதற்கு அடையாளமாய் முத்துப் புன்னகையை வெளிப்படுத்தினாள்.



புரோகிதர் அவசரப்படுத்தினார். 'முகூர்த்த வேளை நெருங்கிற்று. சீக்கிரம்.. சீக்கிரம்!''

அடுத்த சில நொடிகளில்...

மணக் கோலத்தில் மணப் பெண்ணாய் வசந்தனுக்கு பக்கத்தில் மதுரா உட்கார்ந்து கொள்...

முகூர்த்த நேரத்தில் சுப வேளையில் அவள் கழுத்தில் தாலி கட்டினான் வசந்தன்.

திலகா கைநிறைய பூக்களை தெளித்து அவர்களை வாழ்த்தினாள்.

பாஸ்கர் இருண்ட முகத்துடன் தலைகுனிய எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

★